உ

திருச்சிற்றம்பலம்.

திருக்குற்றாலக்குறவஞ்சி.

இஃது,

சிதம்பரம்

கருணாநந்தசுவாமிக

ளவர்களால்

பார்வையிடப்பட்டு,

சிந்தாத்திரிப்பேட்டையிலிருக்கும்

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௬௭௵.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

உ

திருச்சிற்றம்பலம்.

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS

திருக்குற்றாலக்குறவஞ்சி.

விநாயகர் துதி.

ஆசிரியவிருத்தம்.

பூமலியிதழிமாலை புனைந்தகுற்றாலத்தீசர் ... ... *
கோமலர்ப்பாதம்போற்றிக் குறவஞ்சித்தமிழைப்பாட ... *
மாமதத்தருவிபாயு மலையெனவளர்ந்தமேனிக் ... *
காமலிதருப்போலைந்து கைவலான்காவலானே ... ...*

சுப்பிரமணியக்கடவுள் துதி.

ஆசிரியவிருத்தம்.

பன்னிருகைவேல்வாங்கப் பதினொருவர் படைதாங்கப் பத்துத்திக்குந்*
நன்னவவீரரும்புகழமலைகளெட்டுங்கடலேழுநாடியாடப் ... ... *
பொன்னின்முடியாறேந்தியஞ்சுதலையெனக்கொழித்துப்புயனான்மூன்று
தன்னிருதாடருமொருவன்குற்றாலக்குறவஞ்சித்தமிழ்தந்தானே... [ய்த்

திரிகூடநாதர் துதி.

ஆசிரியவிருத்தம்.

கிளைகளாய்க்கிளைத்தபலாக்கொம்பெலாஞ்சதுர்வேதக்கிளைகளீன்ற ... *
சுளையெலாஞ்சிவலிங்கங்கனியெலாஞ்சிவலிங்கங்கனிகளீன்ற ... ...*
சுளையெலாஞ் சிவலிங்கம் வித்தெலாஞ்சிவலிங்கச்சொரூபமாக - விளையு
மொருகுறும்பலாவின்முளைத்தெழுந்த சிவக்கொழுந்தைவேண்டுவோமே

குழல்வாய்மொழியம்மை துதி.

ஆசிரியவிருத்தம்.

தவளமதிதவழ்குடுமிப்பனிவரையின்முளைத்தெழுந்து தகைசேர்முக்கட்
பவளமலைதனிலாசைபடர்ந்தேறிக் கொழுந்துவிட்டுப்பருவமாகி ... *
யவிழ்நறைப்பூங்கடப்பந்தாமரையுமீன்றொருகோட்டாம்பலின்று [மே
குவலயம்பூத்தருள்கொடியைக் கோதைகுழல்வாய்மொழியைக்கூறுவோ

மூவர் துதி - ஆசிரியவிருத்தம்.

தலையிலேயாறிருக்கமாமிக்காகத்தாங்குகடலேழழைத்த திருக்குற்றால
ர்- சிலையிலேதடித்ததடப்புயத்தைவாழ்த்திச் செழித்தகுற வஞ்சிநாடகத்
தைப்பாட-வலையிலேமலைமிதக்கவேறினானுமத்தியிலேபூவையந்நாளழை
ப்பித்தானுங் - கலையிலேகிடைத்தபொருளாற்றிற்போட்டுக் கனகுளத்தி
லெடுத்தானுங் காப்பதாமே ... ... *

அகத்தியர் வாதவூரர் துதி.

ஆசிரியவிருத்தம்.

நித்தர்திரிகூடலிங்கர்குறவஞ்சி நாடகத்தைநிகழ்த்தவேண்டி ... *
முத்தர்திருமேனியெல்லாமுருகவேதமிழுரைத்தனிநிலையைப்பாடி .. *
இத்தனுவிலாத்துமம்விட்டிறங்குநாட்சிலேட்டுமம்வந்தேறுவண்ணம் *
பித்தனடிதுணைசேர்ந்தவாதவூரனடிகள்பேணுவோமே ... ... *

சரஸ்வதி துதி

ஆசிரியவிருத்தம்

அடியிணைமலருஞ்செவ்வா யாப்பலுஞ்சிவப்பினாளை ... *
நெடியபூங்குழலுமைக்கணிலருங்கறுப்பினாளைப் ... ...*
படிவமும்புகழுஞ்செங்கைப்படிகம்போல வெளுப்பினாளைக்
கொடிதனைத்திருக்குற்றாலக்குறவஞ்சிக்கியம்புவோமே...*

நூற்பயன்

ஆசிரியவிருத்தம்

சிலைபெரிய வேடனுக்கு நரிக்கும்வேதச் செல்வருக்குந்தேவரு
க்குமிரங்கி மேனாட், கொலைகளவு கட்காமங் குருத்துரோகங் கொடியப

ஞ்சபாதகமுந்தீர்த்ததாலே,நிலவணிவார்குற்றாலநினைத்தபேர்கணினைத்த
வரம்பெறுவாருநினைக்கவேண்டிப்,பலவளஞ்சேர்குறவஞ்சி நாடகத்தை
ப்படிப்பவர்களுங்கேட்பவர்க்கும் பலனுண்டாமே ... ... *

(அவையடககம் - ஆசிரியவிருத்தம்.)

தாரினைவிருப்பமாகத் தலைதனில்முடிக்குந்தோறு... *
நாரினைப்பொல்லாமெதன்றேஞாலத்தோர்தள்ளுவாரோ
சீரியதமிழ்மாலைக்குட்செல்வர்குற்றாலநாதர் ... ... *
பேரினுமெலனதுசொல்லைப்பெரியவர்தள்ளார்தாமே *

கட்டியக்காரன்வருகிற - விருத்தம்.

தேர்கொண்டவசந்தவீதிச்செலவாகுற்றாலத்தீசர்... ... *
பார்கொண்டவிடையின்மேலறும்பவனிபெச்சரிக்கைகூற ... *
நேர்கொண்டபுரிநூல்மார்புநெடியனகப்பிரம்புமாக... *
கார்கொண்டமுகில்மேலென்னக்கட்டியக்காரன்வந்தான் ... *

இ-ம்-தோடி-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

௧ - பூமேவுமநுவேந்தர்தேவேந்தர்முதலோனாய்... ... *
புரந்திடுஞ்செங்கோலானபிரம்புடையான் ... *

௨ - மாமேருச்சிலையாளர்வரதர்குற்றாலநாதர் ... ... *
வாசற்கட்டியக்காரன்வந்தனனே ... ... *

கட்டியக்காரன்சொல்லுகிற - விருத்தம்.

மூக்கெழுந்தமுத்துடையா ரணிவகுக்குநன்னகரமூதூர்வீதி, வாக்
கெழுந்தகுருமுனிக்காய்மறியெழுந்தகரங்காட்டும்வள்ளலார்சீர்த் - தேக்
கெழுந்தமறைநான்குஞ்சிலம்பெழுந்த பாதர்விடைச்சிலம்பின்மேலறி-மே
க்கெழுந்தமதிக்குடிக்கிழக்கெழுந்தஞாயிறுபோல்மேவினாரோ... ... *

திரிகூடநாதர் பவனிவருதல்.

தரு-இராகம்-பந்துவராளி-தாளம்சாப்பு,

பல்லவி,

பவனிவந்தனரோ-மழவிடைப்-பவனிவந்தனரோ ... *

அநுபல்லவி,

அவனிபோற்றியகுறும்பலாவுறைமெய்ஞ்ஞானநாயகரோவனநாயகர் ... *
சிவனுமாயரியயனுமானவர்சவன்மார்விடையதனிலே... (பவனி)

ஸ்ரீ

குற்றாலக்குறவஞ்சி.

[சரணங்கள்]

க- அண்டர்கூட்டமுமுனிவர்கூட்டமுமசுரர்கூட்டமுமனிதராகிய-தொ
ண்டர்கூட்டமுமிமைப்பிலாரெனச்சூழ்ந்துசனித்தனிமயங்கவே-பண்
டைநாரிவர்தேவரிவரெனப்பகுத்துநிறுவியவேளைதொறுந்தோறும்ம
ண்டலீகரைநந்திபிரம்படிமகுடகோடியிற்புடைக்கவே.....(பவனி)

உ - தடுப்பதொருகரங்கொடுப்பதொருகரந்தரித்தசுடர்மழுவிரித்ததொ
ருகரம்-எடுத்தசிறுமறிபிடித்ததொருகர மிலங்கைப் பணியணுதுலங்க
வே - அடுத்தவொருபுலிகொடுத்தசோமனுமானைகொடுத்தவி தானைச்
சேலையும்,உடுத்ததிருமருங்கசையமாலயன்றொடுத்தபரிகல மிசையவே

௩ - தொடருமொருபெருச்சாளியேறிய தோன்றல் செயப்படைதாங்க
வே-யடல்குலாவியதோகைவாகனத்தாசுவேல்வலம்வாங்கவே - படல
மார்செறிற்கொன்றைமாலிகைபதக்கமணியொளிதேங்கவே - யுடைய
நாயகன்வரவுகண்டுகண்டுலகெலாந்தழைத்தோங்கவே ... (பவனி)

௪ - இடியின்முழக்கொடுபடருமுகிலெனயானைமேற்கனபேரிமுழக்கமு
ந்-தடியின்முழக்கமும்பரந்[illegible]திசைக்கரி துதிக்கையாற்செவிபுதைக்க
வே-அடியர்முழக்கியதிருப்பல்லாண்டிசையடைத்தசெவிகளுந்திறக்க
மூவர்கள், வடிசெய்தமிழ்த்திருமுறைகளொருபுறமறைக ளொருபுறம்
விளங்கவே ... ... (பவனி)

ரு - கனகதம்புருகின்னரங்கழலாசவீணைமிழற்றவே-யனசர்திருமுத்தின்
சிவிகைகவிகைபொன்னாலவட்டநிழற்றவே-வநிதமார்பலகுஞ்சஞ்சா
மலாவரிசைவிசிரிசுழற்றவே-தனதனிந்திரன்வருணன்முதலியசகலதே
வரும்வழுத்தவே... ... ...(பவனி)

௬ - சைவர்மேலிடச்சமணர்கீழிடச்சகலசமயமுமேற்கவே - கைவலாழி
யங்கருணைமாலெடுகமலத்தோன்புடைகாக்கவே- ஐவர்நாயகன்வந்த
னன்பலவமரர்நாயகன்வந்தனன்-தெய்வநாயகன்வந்தனன்னென்னச்
சின்னமெடுத்தெடுத்தார்க்கவே ... . (பவனி)

எ - சேனைபெருக்கமுந் தானைப்பெருக்கமுந் தேர்ப்பெருக்கமுந்தாரி
ன்பெருக்கமும்-ஆனைப்பெருக்கமுங்குதிரைப்பெருக்கமுமவனிமுழு
தினும்நெருக்கவே-மோனைக்கொடிகளின் காடுநெடுவெளிமூடியடங்க
[illegible]மெழுந்துதிசை
[illegible] ... (பவனி)

அ-கொத்துமலர்க்குழல்தெய்வமங்கையர்குரவைபாவையைநெருக்கவே யொத்ததிருச்செவியிருவர்பாடல்களுலகம்மழையுமுருக்கவே, மத்தளம் புயல்போன்முழக்கிட மயிலனார்நடம்பெருக்கவே, சத்திபயிரவிகௌரி குழன்மொழித்தையலாளிடமிருக்கவே .... (பவனி)

பவனிகாணப் பெண்கள்வருகின்ற

விருத்தம்.

பாலேறும்விடையில்வருந்திரிகூடப்பெருமானார்பவனிகாணக் ...... *
காலேறுங்காமனுக்குக்கையேறும்படைப்பவுஞ்சாய்க்கன்னிமார்கள் *
சேலேறுங்கலகவிழிக்கணையிட்டுப்புருவநெடுஞ்சிலைகள்கோட்டி ......*
மாலேறப்பொருதுமென்றுமணிச்சிலம்புமுரசறையவருகின்றாரே ... *

பெண்கள்சொல்லுகின்ற - கண்ணிகள்

இராகம் - புன்னாகவராளி - சாப்புதாளம்.

க- ஒருமானைப்பிடித்துவந்த பெருமானைத்தொடர்ந்துவரு... *
மொருகோடிமான்கள்போல.................. வருகோடிமடவார்
உ- புரிநூலின்மார்பனிவனயனென்பாரயனாகில்............ *
பொங்கரவேமேதனிச் .... சங்கமேதென்பார்

௩- இருகருணைமாலென்பார்மாலாகில்விழியின்மேல்......... *
விழியுண்டோமுடியின்மேல் .... முடியுண்டோவென்பார்
௪- இருபாலுநான்முகனுந் திருமாலும்வருகையா......... *
லீசனிவன்திரிகூட .... வாசனிவனென்பார்

௫- ஒருகைவளைபூண்டபெண்கள் ஒருகைவளைப்பூணமறந்... *
தோடுவார்நகைப்பவரை...........................நாடுவார்கவிழ்வார்
௬- மெய்வளையுமறுவுடையதெய்வநாயகன்முடித்த......... *
வெண்மதியம்விளங்குதெங்கள் .. .. பெண்மதியோவென்பார்

எ- இருதனத்துரவிக்கைதன்னை யரையிலுடைதொடுவா......*
இந்தவுடைரவிக்கையெனச் ... ...சந்தமுலைக்கிடுவார்
அ- கருதுமனம்புறம்போகக் கண்ணுக்குமையெடுத்த ...... *
கையுமாயொருகண்ணிட்ட...... ... மையுமாய்வருவார்

௯- திருபணிவனன்னைத்தெருவிலேநெடுநேரம் ... *
நில்லானோவொருவசனஞ் சொல்லானோவென்பார்
௰- பைவளைத்துக்கிடக்குமவன் மெய்வளையும்பாம்புகட்குப் *
பகையாமோதென்றலைத்தான் ... பகையாமோவென்பார்

௰௪- இவ்வளைக்கைத்தோளழுந்தவிவன்மார்பிலழுந்தாது......*
வெண்முலைநமக்கெழுந்த ... ... வன்னமுலையென்பார்
௰௫- மைவளையுங்குழல்சோரக்கைவளைகொண்டானிதென்ன *
மாயமோசடைதரித்த ... . ஞாயமோவென்பார்

வசந்தவல்லிவருகின்ற - விருத்தம்.

நன்னகர்ப்பெருமான்முன்போய்நாணமுங்கலையுந்தோற்ற ... *
கன்னியர்சநுப்போற்சாட்டிக்காமவேள்கலகமூட்டிப் ... *
பொன்னணிதிலகந்தீட்டிப்பூமலர்மாலைசூட்டி ... ... *
வன்னமோகினியைக்காட்டிவசந்தமோகினிவந்தாளே ...*

இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧- வங்காரபூஷணம்பூட்டித்-திலதந்தீட்டி ... ... *
மாரனைக்கண்ணாலேமருட்டிச் ... ... *
சிங்காரமோகனப்பெண்ணாள்-வசந்தவல்லி... ... *
தெய்வரம்பைபோலவ்வவந்தாள் ... *

௨- கண்ணுக்குக்கண்ணிணைசொல்லத்-திரிகூடக் ... *
கண்ணுதலைப்பார்வையால்வெல்லப் ... *
பெண்ணுக்குப்பெண்மயங்கவே-வசந்தவல்லி ... *
பெடைஅன்னம்போலவேவந்தாள் ... *

௩. கையாரச்சூடகமிட்டு-மின்னாரைவெல்லக் ... ... *
கண்ணிலொருநாடகமிட்டு ... ... *
ஒய்யாரமாகநடந்து- வசந்தவல்லி ... ... *
யோவியம்போலவேவந்தாள் ... ... *

௪- சல்லாபமாதுலீலர்-குற்றாலநாதர் ... ... *
சந்நெடும்வீதிதனிலே ... ... *
உல்லாசமாதுரதிபோல்-வசந்தவல்லி ... ... *
யூர்வசிபுநாணவேவந்தாள் ... . *

(இதுவுமது.)

இ-ம்-பைரவி-அடதாளசாப்பு

கண்ணிகள்.

௧- இருண்டமேகஞ்சுற்றிச்சுருண்டுசுழியெறியுங்கொண்டையாள்- குழை
ஏறியாடிநெஞ்சைச்சூறையாடும்விழிக்கெண்டையாள் ... *
திருந்துபூமுருக்கினரும்புபோலிருக்குமிதழினாள்-வரிச் ... *
சிலையைப்போல்வளைந்துபிறையைப்போலிலங்குநுதலினாள் ... *

௨- அரம்பைதேசவில்லும்விரும்பியாசைசொல்லும்புருவத்தாள்-பிறர் *
அறிவைமயக்குமொருகருவமிருக்குமங்கைப்புருவத்தாள்...... *
கரும்புபோலினித்துமருந்துபோல்வடித்தசொல்லினாள்-கடல் ... *
கத்துதிரைகொழித்தமுத்துநிரைபதித்தபல்லினாள் ... ... *
௩- பல்லினழகையெட்டிப்பார்க்குமூக்கிலொருமுத்தினாள்-மதி ... *
பழகும்வடிவுதங்கியழகுகுடிகொளுமுகத்தினாள் ... ... *
வில்லும்பணிபுனைந்துவல்லிக்கமுகைவென்றகழுத்தினாள்-ஜகம் ... *
விலைபிட்டெழுதியின்ப நிலைபிட்டெழுதுந் தொய்யிலெழுத்தினாள்
௪- கல்லுப்பதிந்ததங்கச்செல்வக்கடகமிட்டசெங்கையாள்-எங்கும் ... *
கச்சுக்கிடக்கினுந்தித்திச்சுக்கிடக்குமிருகொங்கையாள் .. ...*
ஒல்லுங்கருத்தனர்மனக்கல்லுஞ்சுழிக்குமெழிலுந்தியாள்-மீது .. *
ஒழுங்குகொண்டுள்ளத்தைவிருங்குஞ்சிறும்ராகுபந்தியாள் ... *
௫- துடியுள்ளடக்கியொருபிடியுள்ளடங்குஞ்சின்னவிடையினாள்-காமத்
துட்டனரண்மனைக்குக்கட்டுங்கதலிவாழைத்துடையினாள் ... *
அடுக்குவர்ணச்சேலையெடுத்துநெறிபிடித்தவுடையினாள்-மட ... *
அன்னநடையிலொருசின்னநடையிலுப் நடையினாள் ... ...*
௬- வெடித்தகடலமுதையெடுத்துவடிவுசெய்தமேனியாள்-ஒரு ... *
வீமப்பாகம்பெற்றகாமப்பாலுக்கொத்தசீனியாள்... ... ...*
பிடித்தசுகந்தவல்லிக்கொடிபோல்வசந்தவல்லிபெருக்கமே-சத்தி *
பீடவாசர்திரிகூடநாதர்சித்தமுருக்குமே ... ... *

வசந்தவல்லி பந்தடிக்கின்ற

விருத்தம்.

வித்தகர் திரிகூடத்தில் வெளிவந்தவசந்தவல்லி ... ... *
தத்துறுவிளையாட்டாலோதடமுலைப்பணைப்பினாலோ ...*
நத்தணிகரங்கள்சேப்பநாலடிமுன்னேயோங்கிப்... ... *
பத்தடிபின்னேவாங்கிப்பந்தடிபயில்கின்றாளே ... ...*

இ-ம்-பைரவி-சாப்புதாளம்.

கண்ணிகள்

௧- செங்கையில்வண்டுகலீர்கலீரென்றுசெயஞ்செயமென்றாட-இடை-ச
ங்கதமென்றுசிலம்புபுலம்பொடுதண்டைகலந்தாட- இருகொங்கை
கொடும்பகைவென்றனமென்றுகுழைந்துகுழைந்தாட-மலர்ப்-பைங்
கொடிநங்கைவசந்தசௌந்தரிபந்துபயின்றனளே ... ... *
௨- பொங்குகனங்குழைமண்டியகொண்டைபுரண்டுபுரண்டாட-குழல்-
மங்குலில்வண்டு கலைந்துகண்டுமதன்சிலை வண்டோட - இனி-இங்

இந்துகண்டிலைகெல்படுமென்படுமென்றிடைதிண்டாட-மலர்ப் ... *
பங்கயமங்கைவசந்தசௌந்தரி பந்துபயின்றனளே ... ... *

௫- சூடகமுன்கையில்வால்வளைகண்டிருதோள்வளைநின்றாட-புனை ... *
பாடகமுஞ்சிறுபாதமுமங்கொருபாவனைகொண்டாட-நய ... *
நாடகமாடியதோகைமயிலெனநன்னகர்வீதியிலே-அணி ... *
யாடகவல்லிவசந்தவொய்யாரியடர்ந்துபந்தாடினளே ... ... *

௬- இந்திரையோவிவள்சுந்தரியோதெய்வரம்பையோமோகினியோ-மன *
முந்தியதோவிழிமுந்தியதோகரமுந்தியதோவெனவே-உயர் ... *
சந்திரசூடர்குறும்பலவீசுரர்சங்கணிவீதியிலே-மணிப் ... ... *
பைந்தொடிநாரிவசந்தவொய்யாரிபொற்பந்துகொண்டாடினளே

இதுவும்-வசந்தவல்லி-பந்தாடுகின்ற

விருத்தம்

கொந்தடிப்பூங்குழல்சரியநன்னகரில்வசந்தவல்லிகொடியகாமன் ... *
முந்தடிபிந்தடியிடபோய்மூன்றடிநாலடிநடந்துமுடுகிமாதர் ... *
சந்தடியிற்றிருகியிடசாரிவலசாரிசுற்றிச்சகிமார்சூழப் ... . *
பந்தடிக்கும்பாவனையைப்பார்க்கவயனாயிரங்கண்படைத்திலானே ...*

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்,

பல்லவி.

பந்தடித்தனள்வசந்தசுந்தரி-வித்தையாகவே

அநுபல்லவி.

மந்தரமுலைமேசலாடமகரக்குழைகளூசலாடச்-சுந்தரவிழிபூசலாடத் *
தொங்கத்தொங்கத்தொங்கத்தொம்மெனப் ... ... (பந்த)

சரணங்கள்,

௧- பொன்னிறவொளியில்வந்துதாவியமின்னிறவுபோலவே ... ... *
சொன்னயத்தனைநாடிநாடித்தோழியருடன்கூடிக்கூடி ... ... *
நன்னகர்த்திரிகூடம்பாடிநகுர்தத்திகுர்தத்திகுர்தத்தொம்மெனப் (பந்

வசந்தவல்லி-சுவாமிகளைக்காண்கிற

விருத்தம்

வருசங்குவீதிதன்னில் வசந்தபூங்கோதைகாலி .. ... *
விருபந்துகுதிகொண்டாட விருபந்துமுலைகொண்டாட...*
வொருபந்துகைகொண்டாடவொருசெப்பிலஞ்சுபந்துந் *
தெருவந்துவித்தையாடுஞ் சித்திரமெதிர்கண்டாளே ... *

௧௫-இ-ம்-அடாணா-ரூபகதாளம்.
பல்லவி.
இந்தச்சித்தராரோ-வெகு
அநுபல்லவி.
வித்தைக்காரராகவிடையில்வந்தாரோ .. .. (இந்தச்)
சரணங்கள்.

௧- நாகம்புயத்திற்கட்டிநஞ்சுகழுத்திற்கட்டிக் ... *
காகமனுகாமனெங்குங்காடுகட்டி ... ... *
பாகந்தனிலொருபெண்பச்சைக்கிளிபோல்வைத்து *
மோகமாயொருபெண்ணைமுடியில்வைத்தார் ... (இந்தச்)
௨- மெய்யிற்சிலம்பழகுங்கையின்மழுவழகும் ... *
மையார்விழியார்கண்டால்மயங்காரோ .. ... *
செய்யசடையின்மேலேதிங்கட்கொழுந்திருக்கப் ... *
பையைவிரிக்குதம்மாபாம்புசும்மா ... ... (இந்தச்)
௩- அரிக்கண்பார்வையாலேயனங்கன்றங்கமாக ... *
உருக்கிப்போட்டார்கண்டீர்வுடனேதான் ... ... *
பெருக்கம்பார்க்கிலெங்கள்திருக்குற்றாலர்போல ... *
விருக்குதிவர்செய்மாயமொருக்காலே ... (இந்தச்)

தோழிமார்சொல்லக்கேட்டு

வசந்தவல்லி-மோகங்கொள்ளுதல்.
விருத்தம்.

திங்களைமுடித்தார்கண்டாய்திரிகூடச்செல்வர்கண்டா ... *
யெங்குள்சித்துக்கெல்லாமிறையவரிவரோவென்று ... *
நங்கைமார்பலருங்கூறநன்மொழித்தேறன்மாத்தி [ளே
மங்கையாம்வசந்தவல்லி மனங்கொண்டாள்மயல்கொண்டா

இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.
கண்ணிகள்.

௧- முனிபரவினியானேமுழுப்பலவின்கனிதானே ... *
கனியில்வைத்தசெந்தேனேகருத்துருக்கவந்தானே ... *
தினகரன்போற்சிவப்பழகுந்திருமிடற்றிற்கறுப்பழகும் *
பனகவணிக்காதுங்கண்டாற்பாவையுந்தானுருகிவாடா ... *
௨- வாகனைக்கண்டுருகுதையோவடியக்கமதாய்வருகுதையோ . *
மோகமென்பதிதுதானோமுன்னமேநானறிவேனோ ... *

ஆகமெல்லாம்பசந்தேனேயன்னைசொல்லுங்கசந்தேனே ... *
தாகமன்றிப்பூணேனேசரிவளையுங்காணேனே ... ... *

பாங்கிகள்-புலம்பல்.

விருத்தம்.

நடைகண்டாலன்னந்தோற்குநன்னகர்வசந்தவல்லி ... *
விடைகொண்டானெதிர்போர்ச்சங்கவீதியிற்சங்கந்தோற்றாள் ... *
சடைகொண்டானுடன்றான்கொண்டுதன்னுடைகொடுத்தானைய *
னுடைகொண்டவழக்குத்தானோவூர்கண்டதேர்கண்டாளே .. *

இ-ம்-தோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

க- ஆசைகொண்டுபோரிலேவிழ்ந்தாள்நேசமானனென்பார்-விளை ... *
யாடாள்பாடாள்வாடாமாலைசூடாள்காணனென்பார் ... *
பேசொணுதோமோசமென்னமோசமோவென்பார்-காமப் ... *
பேயோவென்பார்பிச்சோவென்பார்மாயமோவென்பார் *
உ- ஐயோவென்னசெய்வோமென்பார்தெய்வமேயென்பார் [பார்
கஸாப்பாச்சோவென்பார் மூச்சேதென்பார்பேச்சேதோவென்
கையிற்றிருநீறெடுப்பாதையலாரெல்லாம்-குலக் ... *
கையர்திரிகூடநாதாகண்பாராயென்பார் ... ... *

வசந்தவல்லியைப்-பாங்கிகளுபசரித்தல்.

விருத்தம்.

வானவர்திருக்குற்றாலர்மையலால்வசந்தவல்லி ... ... *
தானுடல்சோர்ந்தாளென்றுதமனியமாடஞ்சேர்த்து ... *
மேனையார்சூழுந்தோற்றமின்னனார்விழுந்தம்பனைக் ... ... *
கூனைகொண்டமிழ்த்துவார்போற்குளிர்ச்சியால்வெதுப்புவாரே *

இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

க- மருகுசந்தனக்குழம்புபூசுவார்-விரகத்தீயை ... *
மூட்டிமூட்டிவிசிறிவீசுவார் ... ... *
கருகுதேயுடலுருகுதேயென்பார்-விரித்தளிருங் ... *
கரியுதேமூத்தம்பொரியுதேயென்பார் ... ... *
உ- அருகிலிருந்துகதைகளைத்துவார்-எடுத்துமாதர் ... *
அணைத்துவாழைக்குருத்திற்கிடத்துவார் ... ... *

பெருகுநன்னகர்க்குறும்பலாவினூர்-வசந்தமோகினிப் *
பெருநிலாவினொடு குலாவினள் ... ... *

வசந்தவல்லி-சந்திரதூஷணஞ்செய்தல்.

விருத்தம்,

பெண்ணிலோர் குழன்மொழிக்கோர் பங்குகொடுத்தவர் கொடுத்த பிரமையாலே, மண்ணிலேமதிமயங்கிக்கிடக்கின்றேனுனக்குமதிமயக்கந் தானோ, கண்ணிலேநெருப்பைவைத்துக்காந்துவாருடன்கூடிக்காந்திக்காந்தி, பெண்ணிலேநெருப்பைவைத்தாய் தண்ணிலாக் கொழும்பாவிவெண்ணிலாவே ... ... (௰௧)

இராகம்-வராளி- ஆதிதாளம்.

கண்ணிகள்.

க- தண்ணமுதுடன்பிறந்தாய் ... ...வெண்ணிலாவே-அந்தத்
தண்ணளியையேன்மறந்தாய் ... ...வெண்ணிலாவே
பெண்ணுடன்பிறந்ததுண்டோ .. ... வெண்ணிலாவே-என்றன்
பெண்மைகண்டுங்காயலாமோ ... வெண்ணிலாவே
உ- விண்ணிலேபிறந்தவர்க்கோ ... வெண்ணிலாவே - எரு
விட்டுநானெறிந்ததற்கோ ... வெண்ணிலாவே
கண்ணில்விழிபாதவர்போல் ... ...வெண்ணிலாவே- மெத்த
காந்தியாட்டமாட்டுகிறாய் ... வெண்ணிலாவே
௩- ஆகடியஞ்செய்தல்லவோ ... ... வெண்ணிலாவே - நீதா
னாட்கடியன்போற்குறைந்தாய் வெண்ணிலாவே
மோகம்வரக்காணெனென்றால் .... வெண்ணிலாவே - இந்த
வேகமுனக்கானதென்ன ... வெண்ணிலாவே
௪- நாகமென்றேயெண்ணவேண்டாம் ... வெண்ணிலாவே - இது
வாகுகுழற்பின்னல்கண்டாய் ... வெண்ணிலாவே
கோகனகவிறழித்தாய் ... ... வெண்ணிலாவே-திரிகூட
லிங்கர்முன்போய்க்காய்வாய் ... வெண்ணிலாவே

வசந்தவல்லி- மன்மததூஷணஞ்செய்தல்

விருத்தம்,

தண்ணிலாமௌளிதந்தமையலானதையறிந்துதையலார்கள் ... *
எண்ணிலாப்பகையெடுத்தாரின்னகைநன்னகரொன்றெவர்சொன்னரோ
அண்ணலார்திரிகூடநாதரொன்பாரொன்னளவுமமைந்திடாரோ ... *
வெண்ணிலாக்குடைபிடித்துமீனகேதனம்பிடித்தவேனிலானே *

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-சாப்பு

கண்ணிகள்

க- கைக்கரும்பைக்கணைகளையென்னநீயென்ன ... மன்மதா - இந்தச்
செக்கரும்பாவிநிலாவும்போதாதோ மன்மதா
மைக்கருங்கண்ணாளிரதிக்குமால்கொண்ட.... மன்மதா - விடை
வல்லார்க்குமாசைகொண்டபொல்லாப்பெண்மேலுண்டோ மன்மதா
உ- திக்கெல்லாந்தென்றற்புலிவந்துபாயுதே... மன்மதா - குயிற்
சின்னம்பிடித்தபினன்னம்பிடியாதே மன்மதா
அக்காளெனுஞ்சகிவெட்காமலேசுவாள் ... மன்மதா - அவ
ளெல்லாமற்றுமொருபொல்லாதநீலிகாண் மன்மதா
௩- நேரிழையாளையுமேழையும்பாரடா ... மன்மதா - கண்ணில்
நித்திரைதானொருசத்துருவாச்சுதே மன்மதா
பேரிகையேனன்றிப்பூரிகையேன்பிள்ளாய் ... மன்மதா - சிறு
பெண்பிள்ளைமேற்பொருதாண்பிள்ளையாவையோ- மன்மதா
௪- வார்சடையீதல்லதார்குழற்பின்னல்காண் ... மன்மதா - நெற்
வந்ததுகண்ணல்லசிந்துரமோலைபார் மன்மதா
நாரிபங்காளர்தென்னாரியநாட்டினர் ... .. மன்மதா - எங்கள்
நன்னகர்க்குற்றாலர்முன்னமேசெல்லுவாய் மன்மதா

பாங்கிவினவுதல்- விருத்தம்,

படியேழுடையார்திரிகூடப்படைமாமதனைப்பயிற்றியசொல் ... *
அடியேசகியார்திருக்கையிலேயதுநான்பயின்றாலாகாதோ ... *
கொடியேமதுரம்பழுத்தொழுகுங் கொப்பேவம்புபொருதமுலைப்... *
பிடியேமதுகுடிக்கொருபெண்பிள்ளாய்கருத்துவிள்ளாயே ... *

வசந்தவல்லி-பாங்கிக்குரைத்தல்

இராகம் - கல்யாணி - சாப்புதாளம்

கண்ணிகள்,

க- மெய்யார்க்குமெய்யர்திரிகூடநாயகர்மீதில் - மெத்த ... *
மையல்கொண்டேனந்தச்செய்தியைக்கேளாய்நீசகியே ... *
செய்யசடையுந்திருக்கொன்றைமாலையழகுமவர் ... ... *
கையில்மழுவுமென்கண்ணைவிட்டேயகலாதே ... ... *
உ- கங்கைக்கொழுந்தணிதெய்வக்கொழுந்தைநான்கண்டு-குளிர் . *
திங்கட்கொழுந்தையுந்தீக்கொழுந்தாக்கிக்கொண்டேனே ... *

சங்கக்குழையாளைச்சங்கமறுகினிற்கண்டு-இரு ... *
செங்கைக்குட்சங்கமுஞ்சிந்திமறுகிவிட்டேனே ... *

௩- மன்றற்குளவிமதியம்புனைந்தாரைக்கண்டு-சிறு ... *
தென்றற்குளவிதினங்கொட்டக்கொட்டநொந்தேனே *
குன்றச்சிலையாளர்குற்றாலநாதர்முன்போனேன்-மதன் ... *
வென்றிச்சிலைகொண்டுமெல்லமெல்லப்பொருதானே *

௪- பெம்மானைநன்னகர்ப்பேராஜவீதியிற்கண்டு-அவர் ... *
கைம்மானைக்கண்டுகலையைநெகிழவிட்டேனே ... *
செம்மேனிதன்னிற்சிறுகறுப்பானைநான்கண்டு-இன்று *
அம்மாவென்மேனியடங்கலுமேகறுத்தேனே ... *

௫- வெள்ளிவிடையில்வியாழம்புனைந்தாரைக்கண்டு-இந்த *
நள்ளியதிங்களைஞாயிறுபோலக்கண்டேனே ... *
எள்ளளவூணுமுறக்கமுமில்லாரைக்கண்டு-நானும் ... *
எள்ளியவூணுமுறக்கமுமற்றுவிட்டேனே ... ... *

பாங்கிபழித்தல்-விருத்தம்.

தரைப்பெண்ணுக்கணிபோல்வந்ததமனியக்கொடியேமாதர் ... *
துரைப்பெண்ணேவசந்தவல்லிசொன்னபேதமைக்கென்சொல்வேன் *
வரைப்பெண்ணுக்கால்சழுண்டுவளர்சங்கமறுகினூடே ... ... *
நரைத்தமாடேறுவார்க்கோநங்கைநீமயல்கொண்டாயே ... *

வசந்தவல்லிசுவாமிகளைப்புகழ்ந்துகூறல்

இ-ம்-சௌராஷ்டிகம்-ரூபகதாளம் *

கண்ணிகள்

மன்னவர்குற்றாலர்செய்தியின்னமின்னங்கேளாயோமானே .... அவர்
வாகனத்தின்மால்விடைக்குலோகமெல்லாமோரடிகாண்மானே *
சன்னிதியிற்பேறல்லவோபொன்னுலகிற்றேவர்செல்வமானே - தினபல
சந்திரருஞ்சூரியரும்வந்திறங்கும்வாசல்கண்டால்மானே ... [ஞ்
நன்னகரிருக்குநாரொருத்திதானோவாசைகொண்டேன்மானே ... *
கன்னியருமாசைகொண்டார்பின்னியருமாசைகொண்டார்மானே *
தென்னிலங்கைவாழுமொருகன்னிகைவண்டோதரியாள்மானே அவர்
பொன்னணையிற்சேர்த்தணையவென்னதவஞ்செய்தாளோமானே *

இதுவும்-வசந்தவல்லிபாங்கிச்சொல்லுகிற
விருத்தம்.

வேரிலேபழம்பழுத்துத்தூரிலேசுளைவடித்துவெடித்ததீந்தேன் ... *
பாரிலேபாதாளகங்கைநந்தனஞ்சூழ்ந்தபதிநந்தனகங்கை .. *
நீரிலேசுளைபெருகுங்குறும்பலாக்கொலுவிருக்குநடலமூர்த்தி ... *
பேரிலேபிரமைகொண்டபெண்களின்மேலநாளுமொருபெணைகண்டாயே

பாங்கிசொல்லல
விருத்தம்

வசந்தவுல்லாசவல்லியல்லிகருப்பவல்லிபேசி... ... *
பசந்தமேதாரிபட்டபுங்கண்டால்பரமன்மேலாசைகொண்டாய்
திசந்தருந்திருக்குற்றாலர்நிரந்தரமோத்திபுன்பா.. ... *
விலாசந்திடக்கருமமேயமேதா விசையநீயிசைத்திடாயே .. *

வசந்தவல்லி-வருந்துதல்

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்
கண்ணிகள்

௧- புரந்தநெருப்பைமூவர்க்கவித்தவர்மையல்கொண்ட ... என்
ஒருத்திகாமநெருப்பையவிக்கவார் ...... *
பருத்தமலையைக்கையிலிணக்கிலார் ... ... கொங்கையான
பருவமலையைக்கையிலிணக்கிறார் ... *

௨- அஞ்சுதலைக்குளாறுதலைவைத்தார் ... ... எனதுமனதினில்
அஞ்சுதலைக்குளாறுதலைவையார் ... *
நஞ்சுபருகியமுகங்கொடுத்தவர் ... .. எனதுவாள்விழி
நஞ்சுபருகியமுகங்கொடுக்கிலார் .. ...*

௩- தேவர்துறைதன்சாபந்தீர்த்தவர் ... வன்னமாங்குயிற்
சின்னத்துறைதன்சாபந்தீர்க்கிலார் .. *
யாவரும்புகழ்திருக்குற்றாலர்தாம் .. சகலபேர்க்கு
மிரங்குவாரெனக்கிரங்கிலார்பெண்ணே .. . *

பாங்கிசொல்லுகிற-விருத்தம்

நன்னகர்திருக்குற்றாலநாதர்மேலாசைபூண்டு ... ... *
சொன்னவர்க்கிணங்கவார்த்தைசொல்லவும்படித்துக்கொண்டாய் *
என்னிதுவிசேஷஞ்சொல்லத்தக்கதோமிக்கதோதாய் ... . *
என்னிலானதுநான்சொன்னேனினியுனதிச்சைதானே ... , *

வசந்தவல்லி-பாங்கியைத்தூதனுப்புதல்

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி,

தூதுநீசொல்லிவாராய்பெண்ணே-குற்றாலர்முன்போய்த் *
தூதுநீசொல்லிவாராய்பெண்ணே ... ... *

அநுபல்லவி,

ஆதிநாட்சுந்தரர்க்காய்த்தூதுபோனவர்பாலே...(தூது)

சரணங்கள்,

க- உறங்கவுறக்கமும்வாராது-மாயஞ்செய்தாரை-மறந்தால் மறக்கவுங்கூடாது-பெண்ஜனனமென்று-பிறந்தாலும் பேராசையாகாது - ஆகாதென்றுநான்-அறிந்துஞ்சலுகைக்காரர்க்காசையானேனிப்போது(தூ)

உ-நேற்றைக்கெல்லாங்குளிர்ந்துகாட்டி-இன்றுகொதிக்கும்நித்திலாப்பாவிக்கென்னபோட்டி-நடுவேயித்தக்-காற்றுக்குவந்ததொருகோட்டி-விரகநோய்க்கு-மாற்றுமருந்துமுக்கண்மருந்தென்றுபாருங்காட்டி(தூது)

ங- வந்தாலிந்நேரம்வரச்சொல்லு - வாராதிருந்தால்-மாலைபாகிலுந்தரச்சொல்லு-குற்றாலநாதர்-தந்தாலென்னெஞ்சைத்தரச்சொல்லு-தாராதிருந்தால்-தாம்பெண்ணாகியபெண்ணைநான்விடேனென்றுசொல்லு(தூ)

வசந்தவல்லி-பாங்கிக்குச்சந்திசமயஞ்சொல்லுதல்

விருத்தம்.

செவ்வேளையீன்றருள்வார்சிலைவேளைவென்றருள்வார் திரும்பத்தாமே *
யவ்வேளையழைத்தருள்வாரவர்வேளையொருவருக்கு மறியொண்ணாதால்
கைவேழமுரித்தவர்குற்றாலர்கொலுவமாருக்குங்காணொண்ணாதால்... *
எவ்வேளைபலவுமுண்டுவியல்வேளையான்சொலக்கேண்மின்னனாளே ... *

தரு-இ-ம்-புயாகடை-ஆதிதாளம்,

க- திரிகூடராஜருக்குத் திருவனந்தல்முதலாகத் ... *
இன்றுமொன்பதுகால ... ...கொலுவிற்சகியே

உ- பெரிதானவழிபாடுகமெழுகாலமுமொருவர் ... *
பேசுதற்குச்சமயமில்லை ... ...கண்டாய்சகியே

ங- வருநாளிலொருநாளன்றுநீநாளும்வசந்தனுக்கு ... *
மாதவழிவருமிருவழி ... ...இரப்புஞ்சகியே

௪- ஒருநாளுக்கொருநாளில்வியனுகக்குழன் மொழிப்பெண் *
ணுகந்திருக்குங்கொலுவேளை .. .. கண்டாய்சகியே

௫- பெத்தரிக்கமிகுந்திருக்குங்குற்றாலநாதலிங்கர் ... ... *
பெருங்கொலுவிற்சமய ... ... மறியாமற்சகியே

௬- சித்தரொடுதேவர்கணஞ்சிவகணங்கள்தடைசெயத்... ...*
திருவாசற்கடைநிற்பா ... ... சிலபேர்சகியே

௭- அத்தலையிற்கடந்தவர்கள்நந்திபிரம்படிக்கொதுங்கி ... *
ஆட்கொண்டார்குறட்டில்நிற்பார் ... ... சிலபேர்சகியே

௮- மைத்தருங்கண்மாதர்விட்டவண்டுகளுங்கிள்ளைகளும்... *
வாசல்தொறுங்காத்திருக்கும் ... ... கண்டாய்சகியே

௯- கோலமறையோதியசங்கரவிசுவநாதனருள்... ... ...*
குற்றாலச்சிவராமநம்பி ... ... செய்யுஞ்சகியே

௰- பாலாறுநெய்யாறுமபிஷேகநைவேத்தியமும் ... ... *
பணிமாறுகாலமூன்றுங் ... ... கொண்டருளிச்சகியே

௰௧- நாலுமறைப்பழம்பாட்டுமூவர்சொன்னதிருப்பாட்டு...*
நாலுகவிப்புலவர்புதுப்... ... ...பாட்டுஞ்சகியே

௰௨- நீலகண்டர்குற்றாலர்தேவியுடன்கொலுவிருப்பார் ... *
நீக்கமில்லையெல்லார்க்கும் ... . பொதுக்காண்சகியே

௰௩- அப்பொழுதுகுற்றாலர்தேவியுடன்கொலுவிருப்பார் ..*
ஆசைசொல்லக்கூடாது .. ..கண்டாய்சகியே

௰௪- முப்பொழுதுந்திருமேனிதீண்டுவோர்வந்துநின்று... ...*
முயற்சிசெய்யுந்திருவநந்தற் ... ... கூடிச்சகியே

௰௫- கொப்பழகுகுழன்மடந்தைபள்ளியறைதனிலிருந்து *
கோயில்புகுமேகாந்தச் ... ... சமயஞ்சகியே

௰௬- மைப்பழகுவிழியாளென்பெருமாலைநீசொல்லி... ...*
மருமாலைவாங்கிநீ... ... ... வாராய்சகியே

கொச்சகம்.

தெண்ணீர்வடவருவித்தீர்த்தத்தாசெஞ்சடைமே ... *
வெண்ணீர்புனைந்தார்விரகவெம்மைக்காற்றமல் ... *
கண்ணீர்நறும்புனலாய்க்கைவளையேசெய்களையாய் *
உண்ணீரிற்கூடலுமாக்கினறுசெய்வாளே ... ...*

கூடல்சிந்து.

இ-ம்-பந்துவராளி-தாளம்-திரிபுடை.

௧- பாடியமறைதேடிய நாயகர்பன்னகர்பணிநன்னகர் நாயகர் *
பாவலர்மனுக்காவலர் நாயகர்பதஞ்சலிபணிலாளர் *

௨- கோடியமதிசூடிய நாயகர்குழன்மொழிபுணரழகிய நாயகர் *
குறும்பலாவினிற்கூடுவோமெனிற்கூடலேநீகூடாய் - *

விருத்தம்.

ஆடல்வளைவீதியிலேயங்கணர்முன்ம்பாட்டசங்கமாங்குவிட்டில் *
தேடல்வளைக்குறிபோல்க்கூடல்வளைத்திருந்துவல்லியிங்குபோதில் *
கூடல்வளைக்கரமசையமாத்துளைக்கோலந்திமணிக்கூடைதாங்கி *
மாடமறுகூடுதிரிகூடமலைக்குறவஞ்சிவருகின்றாளே *

குறத்திவருதல்-ஆசிரியப்பா.

சைவமுத்திரையைவானின்மேற்றறிக்குந் ... ... *
தெய்வமுத்தலைசேர்திரிகூடமலையான் ... ... *
வான்புனல்குதட்டுமடைக்குருகினுக்குத் ... ... *
தேன்புரையேறுபூஞ்சித்திரநதியான் ... ... *
ஏரிநீர்செழிக்கவாரிநீர்கொழிக்கு ... ... *
மாரிநீர்வளர்தென்னாறியநாட்டான் ... ... *
கன்னிமாப்பழுத்துக்கலிதேன்கொழுத்துச் ... *
செந்நெல்காத்தளிக்குநன்னகர்பதியான் ... ... *
ஓராயிரமறையோங்கியபரியான் ... ... *
ஈராயிரமருப்பேந்தியயானையான் ... ... *
சேவகவிருதுஜெயவிடைக்கொடியான் ... *
மூவகைமுரசுமுழங்குமண்டபத்தான் ... ... *
அண்டகோடிகளையாணையாலடக்கிக் *
கொண்டல்போற்கவிக்குங்கொற்றவெண்குடையான் *
வாலசுந்தரிகுழல்வாய்மொழியருட்கண் ... .. *
கோலவண்டிணங்குங்கொன்றைமாலிகையான் *
பூவளர்செண்பகக்காவளர்தம்பிரான் ... ... *
தேவர்கள்தம்பிரான்திருவருள்பாடி ... ... *
இலகுநீறணிந்துதிலகமுமெழுதிக் ... ... *
குலமணிப்பாசியுங்குன்றியும்புனைந்து ... *

சலவைசேர்மருங்கினிற்சாந்தியகூடையும் ... *
வலதுகைபிடித்தமாத்திரைக்கோலும் ... *
மொழிக்கொருபசப்பும்முலைக்கொருகுலுக்கும் ... *
விழிக்கொருசிமிட்டும்வெளிக்கொருபகட்டுமாய் *
உருவசியரம்பைகருவமுமடங்க ... ... *
முறுவலின்குறும்பால்முனிக்குறும்படங்க ... *
சமனிக்குமுனையால்சபையெலாமடங்கக் ... *
கமனிக்குமலனுங்கடைக்கணலடங்கக் ... ... *
கொட்டியவுடுக்குங்கோடாங்கிக்குறிமுதல் ... *
மட்டிலாக்குறிகளுங்கட்டினலடக்கிக் ... ... *
கொங்கணமாரியங்குச்சிலர்தேசமும் ... ... *
செங்கைமாத்திரைக்கோல்செங்கோல்நடாத்தி ... *
கன்னடந்தெலுங்குகலிங்கராச்சியமுந் ... *
தென்னவர்தமிழாற்செயதம்பததாட்டி ... ... *
மன்னவர்தமக்குவலதுகைநோக்கி ... ... *
இன்னிசைமடவார்க்கிடதுகைபார்த்துக் ... ... *
காலமுன்போங்குறிகைப்பலனுங்குறி ... *
மேலினிவருங்குறிவேண்டுவார்மனக்குறி ... *
மெய்க்குறிகைக்குறிவிழிக்குறிமொழிக்குறி ... *
மெய்க்குறியாயினுமிமைப்பினிலுரைக்கு ... *
மைக்குறிவிழிக்குறவஞ்சிவந்தனளே ... ... *

இதுவுமது-விருத்தம்.

சிலைநுதலிற்கஸ்தூரித்திலதமிட்டுநறுங்குழலிற்செச்சைசூடிக் . . *
கொலைமதர்க்கண்மையெழுதிமாத்திரைக்கால்வாங்கிமணிக்கூடைதாங்கி *
முலைமுகத்திற்குன்றிமணிவடம்புனைந்திரிகூடமுதல்வர்சாரல் ... *
மலைதனிற்பொய்வஞ்சிகுறவஞ்சியபாஞ்சிகொஞ்சிவருகின்றாளே *

தரு-௩-ம்-தோடி-சாப்புதாளம்.

பல்லவி.

வஞ்சிவந்தனளேமலைக்குறவஞ்சிவந்தனளே *

அநுபல்லவி.

ஞ்சியெழிலபாஞ்சிவரிவிழிநஞ்சிமுழுமறநெஞ்சிபலவினி ... *
ஞ்சிசடைமுடிவிஞ்சையமலனைநெஞ்சினினைவொழிமிஞ்சுகுறவெறிசால் ()

சரணங்கள்.

க- வல்லிநிகர் முல்லையில்லையெனுமிடை வில்லையணிநுதல் முல்லையொருந
கை,வெல்லியெனவொருகொல்லிமலைதனில்வல்லியவளினும்வெல்லியி
வளென-ஓல்லிவடகனடில்லிவரைபுகழ்புல்லிவருகுறிசொல்லி,மதுரித
நல்லிபணிமலைவல்லிகுழன்மொழிச்செல்விபுணர்பவர்கல்விமலைக்குற-

உ- குன்றிலிடிமழையின்கனைநிறை குன்றிவடமுலைமுங்கவே-மன்றல்க
மழ்சிறுதென்றல்வரும்வழிநின்றுதரளமிலங்கவே- ஒன்றிலிரதியுமொன்
றில்மதனனுமுசலிடுகுழைபொங்கவே- என்றுமெழுதியமன்றில்நடமி
டுகின்றசரணினர்வென்றிமலைக்குற ... ... (வஞ்சி)

௩- ஆடுமிருகுழைதோடுமொருகுழற்காடுமிணைவிழிசாடவே- கோடுபொ
ருமுலைமூடுசலவையினூடுயிதுங்குமாலாடவே,தோடுமூரளிவசாடியயி
ரவிமோடிபெறவிசைபாடியே - நீடுமலைமயிலாடுமலைமதிசூடுமலைதிரி
கூடமலைக்குற . ... (வஞ்சி)

குறத்தியை-வர்ணித்தல்.

கொச்சகக்கலிப்பா.

முன்னங்கிரிவளைத்த முக்கணர்குற்றாலர்வெற்பில் ... *
கன்னங்கரியகுழற் காமக்குறவஞ்சி ... ... *
பொன்னின்குடம்போற் புடைத்தெழுந்தபாரமுலை ... *
யின்னம்பருத்திட்டா லிடைபொறுக்கமாட்டாதே ... *

தரு-இராகம்- தோடி.-ஆதிதாளம்.

பல்லவி.

வஞ்சிவந்தாள்-மலைக்குற வஞ்சிவந்தாள்

அநுபல்லவி.

வஞ்சிவந்தாள்திரிகூடரஞ்சிதமோகினிமுன்னே ... *
மிஞ்சியவிரகநோய்க்குச்சஞ்சீவிமருந்துபோலே... (வஞ்சி)

சரணங்கள்.

க முப்மையுலகெங்கும்வெல்லக்கொம்மைமுலையார்க்குநல்ல.செம்மை
யாய்க்குறிகள்சொல்லஅம்மேயம்மேயென்றுமெல்ல ... (வஞ்சி)

உ- சோலையில்வசந்தகாலம்வாலகோகிலம்வந்தாற்போல ... *
கோலமலையார்குற்றாலமலைவாழுங்குற ... (வஞ்சி)

௩- மாத்திரைக்கோலதுதன்னைச்சாத்திரங்கண்பார்வையன்னத்
தோத்திரவடிவமின்ன பூத்தமலர்க்கொடியென்ன ... ...(வஞ்சி)

வசந்தவல்லிகுறத்தியைக்கண்டுமலையைவினவுதல்
ஆசிரியவிருத்தம்.

அந்தரதுந்துமிமுழங்குநன்னகர்குற்றாலலிங்கரருளைப்பாடி ... *
வந்தகுறவஞ்சிதன்னைவசந்தவல்லிகண்டுமனமகிழ்ச்சிகொண்டு ... *
சந்தமுலைத்துவளுமிடைத்துவளநகைப்பவளவிதழ்த்தையலேயுன் *
சொந்தமலையெந்தமலையந்தமலைவளமெனக்குச்சொல்லென்றாளே ... *

குறத்திசொல்லல்
இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்-கண்ணிகள்.

க- வானரங்கள்கனிகொடுத்து ... மந்தியொடுகொஞ்சும்
மந்திசிந்துகனிகளுக்கு ... ... வான்கவிகள்கெஞ்சும்

உ- கானவர்கள்விழியெறிந்து ... வானவரையழைப்பார்
கமனசித்தர்வந்துவந்து ... காயசித்திவிளைப்பார்

௩- தேனருவித்திரையெழும்பி ... வானின்வழியொழுகும்
செங்கதிரோன்பரிக்காலுந் ... தேர்க்காலும்வழுக்கும்

ச- கூனலிளம்பிறைமுடித்த ... ... வேணியலங்காரர்
குற்றாலத்திரிகூட ... மலையெங்கள்மலையே

ரு- முழங்குதிரைப்புனலருவி ... ... கழங்கெனமுத்தாடும்
முற்றமெங்கும்பரந்துபெண்கள்... சிற்றிலைக்கொண்டாடும்

சா- கிழங்குகிள்ளித்தேனெடுத்து ... ... வளம்பாடிநடிப்போம்
கிம்புரியின்கொம்பொடித்து ... வெம்புதினையொடிப்போம்

எ- செழுங்குரங்குதேமாவின் ... பழங்களைப்பந்தடிக்கும்
தேனர்சண்பகவாசம் .. ... வானுலகம்வெடிக்கும்

அ- வழங்குகொடைமகராசர் ... ... குறும்பலவிலீசர்
வளம்பெருகுந்திரிகூட ... மலையெங்கள்மலையே

கூ- ஆடுமரவீனுமணி ... கோடிவெயிலெறிக்கும்
அம்புலியைக்கவனமென்று ... தும்பிவழிமறிக்கும்

௰- வேடுவர்கள்தினைவிளைக்கச் ... ... சாடுபுனந்தோறும்
வித்தையகில்குங்குமமுஞ் ... சந்தனமுந்தாறும்

௰க- காடுதோறுமோடிவரை ... ... யாடுகுதிபாயும்
காகமணுகாமலையில் ... மேகநிரைசாயும்

௰உ- நீடுபலவீசர்கயி ... .. லாசகிரிவாசர்
நிலைதங்குந்திரிகூட ... மலையெங்கள்மலையே

௰௩- கயிலையெனும்வடமலைக்குத் ... ... தெற்குமலையம்மே
கனகமகமேருவென ... ... நிற்குமலையம்மே
௰௪- சயிலமலைதென்மலைக்கு ... ... வடக்குமலையம்மே
சகலமலையென்றனக்குள் ... ளடக்கமலையம்மே
௰௫- வயிரமுடன்மாணிக்கம் ... ... விளையுமலையம்மே
வானிரவிமுழைகள்தொறு ... நுழையுமலையம்மே
௰௬- துயிலுமவர்விழிப்பாகி ... .. யகிலமெங்குந்தேடும்
தூங்கர்திரிகூடமலை ... ..யெங்கள்மலையம்மே
௰௭- கொல்லிமலையெனக்கிளைய ... செல்லிமலையம்மே
கொழுநனுக்காணிமலை... ... பழனிமலையம்மே
௰௮- எல்லுலவும்விந்தைமலை ... ... யெந்தைமலையம்மே
இமையமலையென்னுடைய ... தமையன்மலையம்மே
௰௯- சொல்லரியசாமிமலை ... ... மாமிமலையம்மே
தோழிமலைநாஞ்சிநாட்டு ... ... வெழ்விமலையம்மே
௨௰- சொல்லினங்கள்முழவுகொட்ட ... மயிலினங்களாடும்
திரிகூடமலையெங்கள் ... ...செல்வர்மலையம்மே
௨௧- ஒருகுலத்திற்பெண்கள்கொடோம் ...ஒருகுலத்திற்கொள்ளோம்
உறவுபிடித்தாலும்விடோம் ... குறவர்குலந்தாங்கள்
௨௨- வெருவிவருந்தினைப்புனத்திற் ... ... பெருமிருகம்விலக்கி
வேங்கையாய்வெயில்மறைத்த ... பாங்குதனைக்குறித்தே
௨௩- அருளிலஞ்சிவேலர்தமக் ... கொருபெண்ணைக்கொடுத்தோம்
ஆதினத்துமலைகளெல்லாஞ் ... சீதனமாய்க்கொடுத்தோம்
௨௪- பரிதிமதிசூழ்மலையைத் ... ... துருவனுக்குக்கொடுத்தோம்
பரமர்திரிகூடமலை ... ... பழையமலையம்மே

வசந்தவல்லி குறத்தியை நாட்டுவளமும் நகர்வளமும் வினவுதல்.

விருத்தம்.

கோட்டுவளமுலைகாட்டுங்கொடியின்வளமிடைகாட்டுங்குறிஞ்சிபூத்த *
காட்டுவளங்குழல்காட்டுமலைவளந்தானீயுரைத்துக்காட்டுவானேன் ... *
தோட்டுவளம்புரிகாதர்திரிகூடமலைவளருந்தோகையேயுன் ... *
னாட்டுவளமெனக்குரைத்துக்குற்றாலத்தலவளமுநவிலுவாயே ... *

குறத்தி சொல்லுதல்.

இராகம் - கேதாரகௌளம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

க- ஆரமாங்குயிற்சின்னங்கள்காமத்துரைவந்தான்றுரைவந்தானென்றூதத்
ஆரமாமலையின்றுரைவரவரல்குற்றேர்களங்காரஞ்செய்யப் ... [த்
பாரமாமதிவெண்குடைமிஞ்சப்பறக்குங்கிள்ளைப்பரிகள்மின்கொஞ்ச
தேரின்மாரன்வசந்தனுலாவுந்திருக்குற்றாலர்தென்னாரியநாடே ... *

உ- காரைச்சேர்த்தகுழலார்க்குநாணிக்கடலைச்சேர்ந்தகருப்பானமேகம்
சேர்ந்தமலைக்கிணையாகுமலையைச்சேர்ந்துசிலையொன்றுவாங்கி ... *
நீரைச்சேர்ந்தமழைத்தாரையம்பொடுதிலக்கொண்டலின்தேரேறிவெ
ய்யோன்,தேரைச்சூழ்ந்திடக்கார்காலம்வெல்லுந்திருக்குற்றாலர்தென்
னாரியநாடே ... ... *

ங- சூழமேதியிறங்குந்துறையிற்சொரியும்பாலைப்பருகியவாளைகள் ...*
கூழைவாசற்பலாவினிற்பாயக்கொழும்பலாக்கனிவாழையிற்சாய...*
வாழைசாய்ந்தொருதாழையிற்றங்கவருவிருந்துக்குபகரிப்பார்போல
தாழைசோரிடவாழைகுருத்திடுஞ்சந்திரசூடர்தென்னாரியநாடே ...*

ச- அன்னலார்மொழிதன்னைப்பழித்ததென்றுடவர்மண்ணின்மூடுங்கரும்
பு, துன்னிமீனவளர்ந்துமடந்தையர்தோளைவென்றுசுடர்முத்தீன்று
பின்னுமங்கவர்மூரலைவென்று பிரியுங்காலத்திற் பெண்மையைவெல்ல
கன்னல்வேளுக்குவில்லாகவோங்குங்கடவுளாரியநாடெங்களுடே ..*

ரு- தக்கபூமிக்குமுன்புள்ளநாடுசகலதேவர்க்குமன்புள்ளநாடு ....*
முக்கண்ணன்விளையாடியநாடுமுதியநால்மறைபாடியநாடு ... *
திக்கெல்லாம்வளர்ந்தோங்கியநாடுசிவத்துரோகமுநீங்கியநாடு ... *
மைக்கண்ணாள்குழல்வாய்மொருபாகர்வசந்தவாரியநாடெங்களுடே*

சு- அஞ்சிநூறுமகங்கண்டநாடுஅனேகங்கோடியுங்கொண்டநாடு ..*
கஞ்சயோனியுதிக்கின்றநாடுகமலவாணிதுதிக்கின்றநாடு ... ... *
செஞ்சொன்மாமுனிபேசியநாடுசெங்கண்மால்சிவனுகியநாடு ... *
வஞ்சிபாகர்திரிகூடநாதர்வசந்தவாரியநாடெங்களுடே ... *

எ- மாதமூன்றுமழையுள்ளநாடுவருஷமூன்றுவிளைவுள்ளநாடு ... *
வேதமூன்றும்பலாவுள்ளநாடுவிசேஷமூன்றுங்குலாவுள்ளநாடு ... *

போதமுமொன்றுநலஞ்செய்யுநாடு புவனமுமொன்றும்வலஞ்செய்யுநாடு *
நாதமுமொன்றுருவானவர்குற்றாலர்நாதராரியநாடெங்கணாடே ...*

௪-நீங்கக்காண்பதுசேர்ந்தவர்பாவம்நெருங்கக்காண்பதுகன்னலிற்செந்நெல், தூங்கக்காண்பதுமாம்பழக்கொத்து சுழலக்காண்பதுதீந்தயிர்மத்து, வீங்கக்காண்பதுமங்கையர்கொங்கைவெடிக்கக்காண்பதுகொல்லையின்முல்லை, ஏங்கக்காண்பதுமங்கலபேரிகையீசராரியநாடெங்கணாடே ... ... *

௫-ஓடக்காண்பதுபூம்புனல்வெள்ளம் ஒடுங்கக்காண்பதுயோகியருள்ளம் வாடக்காண்டதுமின்னார்மருங்குல்வருந்தக்காண்பதுசூலுளைச்சங்கு * போடக்காண்பதுபூமியில்வித்து புலம்பக்காண்பதுகிண்கிணிக்கொத்து, தேடக்காண்பதுநல்லறங்கீர்த்திதிருக்குற்றாலர்தென்னாரியநாடே *

குறத்தி-தலமகிமைசொல்லுதல்

விருத்தம்.

அரிகூடவயன்கூடமறைகூடத்தினந்தேடவரிதாய்நின்ற... ... ... *
திரிகூடப்பதியிருக்குந்திருநாட்டுவளமுறைக்கத்தெவிட்டாதம்மே ... *
கரிகூடப்பிடிதிரியுஞ்சாரலிலேயொருவேடன்கைவிலேந்தி... ... *
நரிகூடக்கலைசென்றதிரிகூடத்தலமகிமைநவிலக்கேளே ... ... *

இராகம்-பிலஹரி-தாளம்-ஜம்பை.

கண்ணிகள்.

௧ - ஞானிகளுமறியார்கள்சித்ரநதிமூலம் ... ... *
நாதரிந்தவகைசிரித்து சொல்லக்கேளம்மே .. ... *
மேன்மைபெருந்திரிகூடத்தேனருவித்துறைக்கே ... *
மேவுமொருசிவலிங்கத்தேவரகசியமாய்... ... ...*
ஆனதுறையயனுரைத்ததானுமறியாமல்... ... ... *
அருந்தவத்துக்காய்த்தேடித்திரிந்தலையுங்காலம்... *
மோனவானவர்க்கெங்கள்கானவர்கள்காட்டு...... ... *
மூத்தநங்கையாறுசிவமதுகங்கையாறே .. ...*

௨ - சிவமதுகங்கையின்மகிமைபுவனமெங்கும்புகழும் ... *
செண்பகடாவித்துறையின்பண்புசொலக்கேளாய் *
தவமுனிவர்கூட்டரவுமவரிருக்குங்குகையுஞ்...... .. *
சஞ்சீவிமுதலானவிஞ்சைமூலிகையும் ... .*
கவனசித்தராதியருமௌனயோகியருங் ... ... *
காத்திருக்குங்கயிலாயமேற்றிருக்குமம்மே ... ...*

நவநிதியும்விளையுமிடமவிடமதுகடந்தால் ... ... *
நங்கைமார்குறவையொலிபொங்குமாகடலே...... *

௩ - பொங்குகடல்திரிவேணிசங்கமெனச்செழிக்கும் ... *
பொருந்துசித்ரநதித்துறையிற்பொன்னுமுத்துங்கொழிக்கும்
கங்கையனும்வடவருவிதங்குமிந்திரசாபம் ... ... *
கலந்தாடக்கழிநீராய்த்தொலைந்தோடும் பாவம் ... *
சங்கைவீதியிற்பரந்துசங்கினங்கள்மேயும்... ... ... *
தழைத்தமதியிற்சிகரமெங்குங்கொழுத்தகயல்பாயும் *
கொங்கலர்செண்பகசோலைக்குழும்பலாவீசர்... ... *
குற்றாலத்திரிகூடத்தலமெங்கள்தலமே ... ... *

௪ - மன்றுதனில்தெய்வமுரசென்றுமேமுழங்கும் ... *
வளமைபெறுஞ்சதுரயுகங்கிழமையெனவழங்கும் . *
தின்றமதகரிபூசையன்றுசெய்ததலமே ... ... *
நிந்தனைசெய்புட்பதந்தன்வந்தனைசெய்தலமே | ... *
பன்றியொடுவேடன்வலஞ்சென்றறிந்தத்தலமே ... ... *
பற்றுகப்பரமருறைகுற்றாலத்தலமே ... ... *
வென்றிபெறுந்தேவர்களுங்குன்றமாய்மரமாய்... ... *
மிருகமதாய்த்தவசிருக்கும்பெரியதலமம்மே ... *

வசந்தவல்லி-கிளைவினவுதல்

விருத்தம்.

தீர்த்தவிசேடமுந்தலத்தின்சிறந்தவிசேடமுமுரைத்தாய்திருக்குற்றால *
மூர்த்திவிசேடந்தனையுமொழிதோறுநீயுரைத்தமுறையாற்கண்டேன் *
வார்த்தைவிசேடங்கள்கற்றமலைக்குறவஞ்சிக்கொடியேவருகைவாசற் *
கீர்த்திவிசேடமும்பெரியகிளைவிசேடத்தையுநீவிளத்துவாயே .. ... *

குறத்தி-சொல்லுதல்

இராகம்-முகாரி-ஏகதாளம்

கண்ணிகள்.

௧-குற்றாலக்கிளைகளத்தைக்கூறக்கேளம்மே ... ...*
குலம்பார்க்கில்தேவரினும்பெரியகுலங்கண்டாய்... ...*
பெற்றதாய்தந்தைதனையுற்றுநீகேட்கில்... ... *
பெண்கொடித்தடலையாசன்றனைக்கேட்கவேண்டும் ...*

உற்றதொருபனிமலையின் கொற்றவேந்தனுக்கும் ... *
உயர்மதுரைமாறனுக்குஞ் செயமருகர்கண்டாய் ... *
வெற்றிபெறும்பாற்கடலில்புற்றரவினுறங்கும் ... *
வித்தகர்க்குக்கண்ணனைமைத்துனர்காணம்மே ... *

உ- ஆனைவாகனத்தானைவானுலகிலிருத்தும் ... *
ஆருவாகனத்தார்க்குந் தாலைவாகனர்க்குந் ... *
தானையாற்றந்தைகாலறிந்தடிகளுக்குந் ... ... *
தருகாழிமகனுர்க்குந்தகப்பனுர்கண்டாய் ... *
சேரமகபதிவாசலானைபெரும்பிடிக்குந் ... *
தேனீன்றமலைச்சாரல் மானீன்றகொடிக்குங் ... *
கானமலர்மேலிருக்குமோனவயனுர்க்குங் ... ... *
காமனுர்தமக்குமிவர்மாமனாரம்மே ... *

ங-பொன்னுலகிற்றேவருக்குமன்னுலகத்தவர்க்கும் *
பூதலத்தின்முனிவருக்கும்பாதலத்துள்ளார்க்கும் ... *
அன்னவடிவெடுத்தவர்க்குமேனவுருவார்க்கும் ... *
அல்லார்க்குமுன்னுதித்தசெல்வர்காணம்மே ... *
முன்னுதித்துவந்தவரைத்தமயனெனவுரைப்பார் ... *
மொழிந்தானுமொழியெலாம்பழுதிலைகாணம்மே *
நன்னகரிற்குற்றாலநாதரிவளவளத்தை ... *
நானுரைப்பதரிதலதுதானுரைக்குமம்மே ... *

வசந்தவல்லி-வினவுதல்

விருத்தம்.

நீர்வளம்பவளமேனிநிமலர்குற்றாலநாதர் ... *
கூர்வளம்பாடியாடுங்குறவஞ்சிக்கொடியேகேளாய் ... *
கார்வளர்குழலாற்கெல்லாங்கருதிநீயிருதாய்ச்சொல்லும் ... *
சீர்வளர்குறியின்மார்க்கந்தெரியவேசெப்புவாயே ... *

குறத்தி- சொல்லுதல்.

தரு-இராகம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி.

வித்தார மென்குறி யம்மே - மணி ... *

அநுபல்லவி.

முத்தாரம்பூணுமுகிழ்முலைப் பெண்ணே ... *
வித்தாரமென்குறியம்மே ... ... *

சரணங்கள்.

௧- வஞ்சிமலையொடு ... கொச்சி ... கொங்கு
மக்கராடந்துளுக்காண ... மெச்சி .. *
செஞ்சிவடகாசி ... நீளம் ... சீனஞ்
சிங்களமீழங்கொழும்பு ... வங்காளம் ... *
தஞ்சைசிராப்பள்ளிக் ... கோட்டை ... தமிழ்ச்
சங்கமதுரைதென்மங்கலப் பேட்டை .. *
மிஞ்சிகுறிசொல்லிப் ... பேராய் ... திசை
வென்றுநான்பெற்றவிருதுகள் பாராய் (வித்தார)

௨- நன்னகர்குற்றாலந் ... தன்னில் .. எங்கும்
நாட்டுமெணை னூற்றெண்பத்தேழாண்டுதன்னில் *
பன்னகமாமுனி ... போற்றத் ... தமிழ்ப்
பாண்டியனார்முதற்சிற்றோடுமேய்ந்த ... *
தென்னாருஞ்சித்ர ... சபையய ... எங்கள்
சின்னணஞ்சாத்தேவன்செப்போடுமேய்ந்த ... *
முன்னாளிலேகுறி ... சொல்லிப் ... பெற்ற
மோகனமாலைப்பார்மோகன வல்லி (வித்தார)

௩- அன்பாய்வடகுணை ... பாலில் ... கொல்லத்
தாண்டொருநானூற்றிருபத்துநாலில் ... *
தென்காசியாலய ... மோங்கக் ... குறி
செண்பகமாறர்க்குச்சொன்னபேர் நாங்கள் *
நன்பாண்டியராச்சிய ... முய்ய ... சொக்க
நாயகர்வந்துமணக்கோலஞ் செய்ய *
இன்பமதுராமீ ... னாட்சி .. குறி
யெங்களைக்கேட்டதுஞ்சங்கத்தாரசாட்சி (வித்தார)

வசந்தவல்லி-கேட்குதல்.

விருத்தம்.

கலவிக்குவிழிவாள்கொண்டுகாமனைச்சிங்கிகொள்வாய் ... *
குலவித்தைகுறியேயானாற்குறவஞ்சிகுறைவைப்பாயோ ... *
பலவுக்குள்கனியாய்நின்றபரமர்குற்றாலநாட்டில் .. ... *
இலவுக்குஞ்சிவந்தவாயாளெனக்கொருகுறிசொல்வாயே ... *

குறத்தி-சொல்லல்
இ-ம்-அடாணா-ஆதிதாளம்
கண்ணிகள்

க- என்பாகுறியாகிலுநான்சொல்லுவே ... .. னம்மே - சது
ரோறுவேனெதிர்த்தபேனாவெல்லுவே ... னம்மே

உ- மன்னியர்கள்மெச்சுகுறவஞ்சிநா ... னம்மே என்றன்
வயிற்றுக்கித்தனைபோதங்கஞ்சிவா ... ரம்மே

ங- பின்னமன்றிக்கூடைமுனிறுங்கொண்டுவா ... வம்மே- வந்தாற்
பெரியகுடுக்கைமுட்டமண்டுவே ... னம்மே

ச- தின்னவிலையும்பிளவுமள்ளித்தா ... வம்மே - கப்பல்
சீனச்சரக்குந்துக்கிணிகிள்ளித்தா ... வம்மே

ரு- அம்மையம்மேசொல்லவாராய்வெள்ளச்சி யம்மே - உனக்
காக்கம்வருகுறுபாராய்வெள்ளச்சி ... யம்மே

சு- விம்முமுலைக்கன்னிசொன்னபேச்சுநன் ... றம்மே - நேரோ
மேல்புறத்திலாந்தையிட்டவீச்சுநன் ... றம்மே

எ- தும்மலுங்காகமுமிடஞ்சொல்லுதே ... யம்மே - சரம்
சூட்சமாகப்பூரணத்தைவெல்லுதே ... யம்மே

அ- செம்மையிதுநன்னிமித்தங்கண்டபா ... ரம்மே - திரி
கூடமலைத்தெய்வமுனக்குண்டுபா ... ரம்மே

இதுவும்-குறத்திசொல்லுதல்.

விருத்தம்.

பல்லியும்பலபலவென்னப்பகருதுதிரிகூடத்திற் ... ... *
கல்விமான்சிவப்பின்மிக்கான்கருத்தின்மேன்மறுவுமுள்ளான் *
நல்லமேயங்துலத்தானிந்தநன்னகர்தலத்தானுக ... ... *
வல்லியேயுனக்குநல்லமாப்பிள்ளைவருவானம்மே ... *

இதுவுங்-குறத்திசொல்லுவது
ஸ்ரீராகம்-அடதாளசாப்பு
கண்ணிகள்.

க-நானமெழுகுகோலமிடுமுறைபெறவேகணபதிவையம்மே [மே
குட்டுந்தாங்சாமப்பழம்படைப்பாய் தேங்காயுமுடைத்து வைப்பாயம்

௨-அறுகுபுனல்விளக்கிடுவாயடைக்காய்வெள்ளிலைகொடுவாயம்மே ...✽
வடை- அப்பமவல்வர்க்கவகைசர்க்கரைவையொப்பொரிவையம்மே✽

௩-நிறைநாழியளந்துவைப்பாயிறையோனைக்கரங்குவிப்பாயம்மே ✽
குறி- நிலவரத்தைத்தேர்ந்துகொள்வாய்குலதெய்வத்தைநேர்ந்துகொள்வாயம்மே ... ... ✽

௪-குறிசொல்லவாகுறிசொல்லவாபிறைநுதலேகுறிசொல்லவாவம்மே ✽
ஐயர்-குறும்பலவர்திருவுளத்தாற்பெருபலனுங்குறிசொல்லவாவம்மே.

குறத்திசொல்லுதல்.

கட்டளைக்கலித்துறை.

ஆனேறுசெல்வர்திரிகூடநாதரணிநகர்வாழ் ... ✽
மானேவசந்தப்பசுங்கொடியேவந்தவேளைநன்றே ✽
தானேயிருந்ததலமுநன்றேசெழுந்தாமரைப்போற் ✽
கானேறுகைம்மலர்காட்டாய்மலக்குறிகாட்டுதற்கே ✽

இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்.
கண்ணிகள்.

௧-முத்திரைமோதிரமிட்டகையைக்காட்டா-யம்மே ✽
முன்கைமுதாரியிட்டகையைக்காட்டாய் ✽

௨-அத்தகடகம்புனைந்தகையைக்காட்டாய்-பொன்னி
னலங்காரதெளியிட்டகையைக்காட்டாய் ... ✽

௩-சித்திரச்சூடகமிட்டகையைக்காட்டாய்-பசுஞ் ... ✽
செங்கைமலர்ச்சங்கரேகைக்கையைக்காட்டாய் ✽

௪-சத்திபீடத்திறைவர்நன்னகர்க்குள்ளே-வந்த ... ✽
சஞ்சீவியேயுனதுகையைக்காட்டாய் ... ✽

கொச்சகக்கலிப்பா.

ஏழையங்கர்செங்கைமழுவேற்றவர்குற்றாலர்வெற்பில் ...✽
வாழிகொண்டமோகவசந்தவல்லிகையைபார்த்து ... ✽
ஊழிகொண்டசெங்கனிவாய்மிக்குறவஞ்சியழுந் ... ✽
கூழையுண்டவாயாற்குறியைவிண்டுசொல்வாளே ✽

குறத்திசொல்லுதல்

இ-ம்-பைரவி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

௧- மாருமலிருநிலத்தி ... ... லறம்வளர்க்குங்கையே
மனையறத்தாலறம்பெருக்கித்... திறம்வளர்க்குங்கையே

௨- வீருகநவநிதியம் .... விளையுமிந்தக்கையே
மேன்மேலும்பாலமுத .. ... மளையுமிந்தக்கையே

௩- ஆருதசனங்கள்பசி ... ... யாற்றுமிந்தக்கையே
அனங்கனையார்வணங்கிநிதம் ... போற்றுமிந்தக்கையே

௪- பேருகநன்னகரந் ... .. காற்குமிந்தக்கையே
பிறவாதநெறியார்க்கே ... ... யேற்குமிந்தக்கையே

குறத்தி-தெய்வம்பரவல்

விருத்தம்

கைக்குறிபார்க்கிலிந்தக்கைப்பிடிப்பவர்தாமெட்டுத் *
திக்குமேயுடையராவர்ஜெகமகராசிநீயே ... ... *
இக்குறிபொய்யாதென்றேயிறையவர்திரிகூடத்தில் .. *
மெய்க்குறவஞ்சிதெய்வம்வியப்புறவணங்குவாளே... *

ஆசிரியப்பா.

குழல்மொழியுதித்தார்குறும்பலாவுடையார்... ... ... *
அழகுசந்நிதிவாழம்பலவிநாயகர் ... ... *
செந்தில்வாழ்முருகாசெங்கண்மால்மருகா ... ... *
கந்தனேயிலஞ்சிக்கடவுளேசரணம் ... ... *
புள்ளிமானின்றபூவையேகுறக்குல... ... ... *
வள்ளிநாயகியேவந்தெனக்குதவாய்... ... ... *
அப்பனேமேலவாசலிலரசே ... ... *
செப்பருமலையேற்றெய்வகன்னியர்காள் ... ... *
ஆரியங்காவரவருட்சொரிமுத்தே... ... ... *
நேரியகுளத்தூர்நின்றசேவகனே ... ... *
கோலமாராளிகுற்றாலநங்காய் ... ... *
காலவைரவாகனதுடிகருப்பா... ... ... *
முன்னடிமுருகாவன்னியராயா ... ... *
மன்னியபுலிபோல்வரும்பன்றிமாடா... ... ... *

எக்கலாதேவிதுர்க்கைபிடாரி ... ... *
மிக்கதோர்குறியாய்வேண்டினனுங்களே ... ... *
வந்துமுன்னிறைந்துவசந்தமோகினிப்பெண் ... ... *
சிந்தையினினைத்ததுசிவனோகாதுவோ ... ... *
சலவையோபட்டோதவசதானியமோ .. .. *
கலவையோபுழுகோகளபகஸ்தூரியோ ... ... *
வட்டிலோசெம்போவயிரமோமுத்தோ ... ... *
கட்டிலோமெத்தையோகட்டிவிராகனோ... ... ... *
வைப்பொடுசெப்போவரத்தொடுசெலவோ... ... ... *
கைப்படுதிரவியங்களவுபோனதுவோ ... ... *
மறுவிலாப்பெண்மயல்வருந்திருஷ்டிதோஷமோ .. ... *
திரிகண்ணானவர்செய்தனகமயக்கமோ ... ... *
மன்னர்தாமிவள்மேல்மயல்சொல்லிவிட்டதோ *
கன்னிதானொருவர்மேற்காமித்தகுறியோ ... ... *
சேலையும்வளையுஞ்சிந்தினதியக்கமோ ... *
மாலையுமணமும்வரப்பெறுங்குறியோ ... ... *
இத்தனைகுறிகளிலிவள்குறியிதுவென ... *
வைத்ததோர்குறியைவகுத்தருள்வீரோ ... ... *

குறத்திசொல்-விருத்தம்.

கடித்திடுமரவம்பூண்டகருத்தர்குற்றாலர்நேயம் ... *
பிடிக்குதுகருத்துநன்றாய்ப்பேசுதுசக்கதேவி ... ... *
துடிக்குதென்னுதடுநாவுஞ்சொல்லுசொல்லென்னவாயில் *
இடிக்குதுகுறளியம்மேயினிக்குறிசொல்லக்கேளே ... *

குறத்திசொல்லுதல்

இ-ம்-பிலஹரி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧- சொல்லக்கேளாய்க்குறிசொல்லக்கேளா-யம்மே ... *
தோகையர்க்கரசேகுறிசொல்லக்கேளாய் ... *

௨- முல்லைப்பூங்குழலாளேநன்னகரில்வாழ்-முத்து... ... .. *
மோகனப்புகழ்க்கிளியேசொல்லக்கேளாய் ... ... *

௩- பல்லக்கேறுந்தெருவிலானைநடத்தி-மணிப் ... ...*
பணியாபரணம்பூண்டபார்த்திபன்வந்தான் ... ...*

௪- செல்வப்பூங்கோதையேநீபந்தடிக்கையி-லவன் ... *
சேனைகண்டவெருட்சிபோல்காணுதேயம்மே ... ... *

வசந்தவல்லிசொல்லுதல்.

இராகம்-பந்துவராளி-தாளம்-திரிபுடை

கண்ணிகள்.

௧- நன்றுநன்றுகுறவஞ்சிநாடகக்காரி-இந்த ... ...*
நாட்டாணைபேர்க்கானவார்த்தைதானறியேனே ... *

௨- ஒன்றுபோடாதேகுறிசொல்லியேவந்தாய்-பின்னை ... *
பழிப்பிப்போட்டாய்குறியுங்குழப்பிப்போட்டாய் ... *

௩- மன்றில்வருஞ்சேனைதன்னைக்கண்டுபயந்தால்-இந்த ...*
மையலுங்கிறுகிறுப்புந்தையலார்க்குண்டோ ... *

௪- இன்றுவரையேகுளிருங்காய்ச்சலுமுண்டோ-பின்னை *
யெந்தவகையென்றுகுறிகண்டுசொல்லடி ... *

குறத்திசொல்லுதல்,

கண்ணிகள்.

௧- வாகனத்திலேறிவரும்யோகபுருஷன்-அவன் ... *
வங்காரப்பவனியாலைசபெண்களுக்குள்ளே . . *

௨- தோகைநீயவனைக்கண்டுமோகித்தாயம்மே-அது ...*
சொல்லப்பயந்தேனிருந்தேன்சொல்லுவேன்முன்னே *

௩-காமனுகாதிரிகூடமலைக்கே-உன்மேல் ... *
காய்ச்சலல்லகாய்ச்சலல்லகாமக்காய்ச்சல்காண் ... *

௪-மோகினியேயுன்னுடற்கிறுகிறுப்பெல்லாம்-அதன் *
மோகக்கிறுகிறுப்பேடிமோகனக்கள்ளி ... *

வசந்தவல்லி-சொல்லுதல்.

கண்ணிகள்.

௧- கன்னியென்றுநானிருக்கநன்னகர்க்குள்ளே-எல்லைக் *
காமியென்றாய்குறவஞ்சிவாய்மதியாமல் ... *

௨-சன்னையாகச்சொன்னகுறிசாதிப்பையானால்-அவன் *
தாருஞ்சொல்லிப்பேருஞ்சொல்லியூருஞ்சொல்லடி *

குறத்திசொல்லுதல்.

கண்ணிகள்.

௧- உன்னைப்போலெனக்கவனறிமுகமோ-அவன் ... *
ஊரும்பேருஞ்சொல்லுவதுங்குறிமுகமோ ... *

௨-பின்னையுந்தானுனக்காகச்சொல்லுவேனம்மே-அவன் *
பெண்சேரவல்லவன்காண்பெண்கட்கரசே ... *

வசந்தவல்லிசொல்லுதல்,

கண்ணிகள்.

௧- வண்மையோவாய்மதமோவித்தைமதமோ-என்றன் *
மதியாமல்பெண்சேரவல்லவனென்றாய் ... *

௨-கண்மயக்கால்மயக்காதேயுண்மைசொல்லடி-பெருங் *
கானமலைக்குறவஞ்சிக்கள்ளிமயிலி ... *

குறத்திசொல்லுதல்.

௧- பெண்ணரசேபெண்ணென்றால்திரியுமொக்கு-ஒரு ... *
பெண்ணுடனேசேரவென்றால்கூடவுமொக்கு ... *

௨- திண்ணமாகவல்லவனும்நாதனுமொக்கு-பேரைத் ... *
திரிகூடநாதனென்றேசெப்பலாமம்மே ... *

கவிகூற்று.

மன்னர்திரிகூடநாதனென்னும்போதிலே-முகம் *
மாணிக்கவசந்தவல்லிநாணிக்கவிழ்ந்தாள் ... ..*

குறத்திசொல்லுதல்.

கண்ணிகள்.

௧- நன்னகரிலீசருன்னைமேவவேவாரார்-இந்த ... ... *
நாணமெல்லாம்நாளைதானும்காணவேபோறேன் ... *

௨- கைதொடியிற்பொன்னிதழிமாலைவருங்கா-ணினிக் *
கக்கத்திலிடுக்குவாயுன்வெட்கத்தையம்மே ... *

என்றுமொருகுறவஞ்சிதன்னையழைத்தே-அவட் ... *
கிட்டுச்சருவாபரணம்பூட்டினாளே ... ... *

சிங்கன் வருதல்

விருத்தம்.

பாமாலைத்திரிகூடப்பரமரருள்பெறவசந்தப்பாவைகூந்தற் *
பூமாலையிதழிபெறப்பொன்மாலைமணிமாலைபொலிவாய்ப்பூண்டு *
நாமாலைக்குறவஞ்சிதன்னகர்பட்டணமுழுதும்நடக்குநாளில் *
மாமாலைபூணுடசிங்கன்வங்கணச்சிங்கியைத்தேடிவருகின்றானே *

இதுவுமது-விருத்தம்.

வக்காவின்மணிபூண்டுகொக்கிறகுசிகைமுடித்துவரித்தோற்கச்சை ... *
தொக்காகவரிந்துறுக்கித்தொடர்புலியைவண்டுறுக்கித்தூணிதூக்கிக் *
கைக்கானவாயுதங்கள்கொண்டுசிலவிக்கோலெடுத்துக்கண்ணிசேர்த்துத் *
திக்கடங்காக்குறவசிங்கன்குற்றாலத்திரிகூடச்சிங்கன்வந்தான் ... *

இதுவுமது-விருத்தம்.

வக்காவின்மணிசூடிகைக்காரிசிங்கிவரும்வழியைத்தேடி. ... ... *
மிக்கானபுலிகரடிகிடுகிடெனநடுநடுங்கவெறித்துநோக்கி ... ... *
கக்கானவெல்வேறுலமிடுங்குருவிகொக்குக்கேற்றகண்ணிகையில்வாங்கி *
தொக்காகநடைநடந்துதிரிகூடமலைக்குறவன்தோன்றினானே ... *

இராகம்-அடாணா-சாப்புதாளம்.

கண்ணிகள்.

சொக்கிறகுசூடிக்கொண்டுகுருவிவேட்டையாடிக்கொண்டு ... *
வக்காவின்மணிபூட்டிக்கொலைபமடவார்கண்போலிட்டிக்கொண்டு *
தொக்காய்கச்சையிறுக்கிக்கொண்டுதுள்ளுமீசைமுறுக்கிக்கொண்டு ... *
திக்கடங்காக்குறவசிங்கன்திரிகூடசிங்கன்வந்தான் ... ... *

சிங்கன் சொல்லுதல்.

விருத்தம்.

ஆளிபோற்பறந்துசுரும்பிசைகேட்குந்திரிகூடத்தமலர்நாட்டில் ... *
வேளைதொறும்புகுந்துதிருவிளையாட்டங்கண்ணுகுத்திவேட்டையாடி *
ஞாளிபோற்சுவடெடுத்துப்பூனைபோலொளிபோட்டுநரிபோற்பம்மிக்
கூளிபோற்றொடர்ந்தடிக்குந்திரிகூடப்பெரியசிங்கக்குறவனானே ... *

இராகம்-தனியாசி-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧- தேவருக்கரியார்மூவருக்கரியார்-சித்திரசபையார்சித்திரநதிசூழ் *
கோவிலிற்புறவில்காலிட்டலங்கா குருவிகள்படுக்குங்குளுவனுநானே

௨- காதலஞ்செழுத்தாற்போதநீறணியார்- கைந்நரம்பெடுத்துக்கின்னர
ந்தொடுத்துப், பாதகர்தோலால் பலதவிலடித்துப் - பறவைகள்படுக்
குங்குறவனும்நானே ... ... *

௩- தலைதனிற்பிறையார்பலவினிலுறைவார் - தசையினைவணங்காசிகைத
னைபிடித்தே, பலமயிர்நறுக்கிச்சிலகண்ணியிறுக்கிப் - பறவைகள்படுக்
குங்குளுவனும்நானே ... ... *

௪- ஒருகுழைச்சங்கம்ஒருகுழைத்தங்கம்-உரியவிமலர்திரிகூடநாதர் *
திருநாமம்போற்றித்திருநீறுசாற்றித்-திரிகூடநாமச் சிங்கனும்நானே

நூவன்வருதல்-விருத்தம்.

புலியொடுபுலியைத்தாக்கிப்போர்மதயானைச்சாய்க்கும் *
வலியவர்திரிகூடத்தில்மதப்புலிச்சிங்கன்முன்னே ... *
கலிகளுங்கதையும்பேசிக் கையிலேபிட்டிவாங்கி ... ...*
எலிகளைத்துரத்துங்வீர னீப்புலிநூவன்வந்தான் ... ... *

இ-ம்-அடாணா-சாப்புதாளம்.

கண்ணிகள்

௧- ஊர்க்குருவிக்குக்கண்ணியுங்கொண்டு- உள்ளான்பிடித்திடுமெண்ணிக்
கொண்டு, மார்க்கமெல்லாம்பலபேசிக்கொண்டு- கோட்காரநூவனும்
வந்தானே ... ... *

௨-கருக்குருவிக்குக்கண்ணியுங்கொண்டுகாலுங்கோழிக்குப்பொரியுங்கொ
ண்டு,வரிச்சிலைக்குளுவரிற்கவுண்டன்- வாய்ப்பானநூவனும்வந்தானே

௩- ஏகனைநாகனைக்கூவிக்கொண்டு-எலியானைபுலியானை யேவிக்கொண்டு
வாகானசிங்கனை மேவிக்கொண்டு-வங்காரநூவனும்வந்தானே ... *

௪- கொட்டகைத்தூண்போலக்காலிலங்க-ஒட்டகம்போலமேலிலங்க*
கட்டானதிரிகூடச்சிங்கன்-மட்டிவாய்நூவனும்வந்தானே ... *

சிங்கன்பட்சிகளைப்பார்த்தல்-விருத்தம்.

மூவுலகைமருளுஞ்சாயமூரலாலவலைஞ்செய்த ... *
சேவகர்திருக்குற்றாலர்திருவிளையாட்டந்தன்னில் *
பாவகமாகநூவன்பறவைம்பாற்பறவைகூவி ... *
மாவின்மேலேறிச்சிங்கன்வரும்பக்ஷிபார்க்கின்றானே ... *

தரு-இராகம்- கல்யாணி- ஆதிதாளம்.

பல்லவி.

வரிகினுமையே-பறவைகள்-வருகினுமையே ... *

அநுபல்லவி.

வருகினுமையேதிரிகூடநாயகர் ... ... *
வாட்டமில்லாப்பண்ணைப்பாட்டப்புரமெல்லாம் ... *
குருகுநாரையுமன்னமுந்தாராவும் ... ... *
கூழைக்கிடாக்களுஞ்செங்கால்நாரையும் (வருகினு)

சரணங்கள்.

க- சென்னியிலேபுனற்கன்னியைவைத்த ... ... *
திரிகூடநாதர்கிரிமாதுவேட்கையில் ... *
மன்னனொருவன்வரிசையிட்டான்கங்கை ... ... *
மங்கைக்குதானும்வரிசைசெய்வேனென ... *
அன்னதயாவுடையாகாசகங்கை ... ... *
யபிக்கலைக்காணப்புறப்படநேத்திபோல் ... *
பொன்னிறவானெங்குந்தன்னிறமாகப் ... ... *
புரிந்துபுவனந்திருந்தருகினம் ...(வருகினு)

உ- காடைவருகுதுகப்புள்வருகுது ... ... *
காக்கைவருகுதுகொண்டைக்கிலாத்தியும் ... *
மாடப்புறாவுமயிலும்வருகுது ... ... *
மற்றொருசாரியாய்க்கொக்குத்திரளெல்லாம் ... *
கூடலையுள்ளாக்கிச்சைவம்புறமாக்கிக் ... *
கூடுஞ்சமணரைநீடுங்கழுவேற்ற ... *
ஏடெதிரேற்றியசம்பந்தமூர்த்திக்கன் ... ...*
றிட்டதிருமுத்தின்பந்தல்வந்தாற்போலே (வருகினு)

௩- வெள்ளைப்புறாவுஞ்சகோரமுமாந்தையும் ... *
மீன்கொத்திப்புள்ளுமரங்கொத்திப்பட்சியும் ... *
கிள்ளையும்பஞ்சவர்ணக்கிளிகூட்டமுங் ... ... *
கேகயப்பட்சியுந்நாகணவாய்ச்சியும் ... *

உள்ளானுஞ்சிட்டும்வலியானுமன்றிலும் ... *
ஓலஞ்செய்தேகூடிநாலைஞ்சுமேதோற்றமாய் ... ...*
துள்ளாடுங்குலகபாலப்பிராட்டியார் ... ... *
தொட்டாடுமைவர்ணப்பட்டாடைபோலவே (வருகினு)

சிங்கன்சொல்.

கொச்சகக்கலிப்பா.

ஈராயிரங்கருத்தானேற்றசங்குநான்மறையும் ... *
சீராயிரங்கநடஞ்செய்தவர்குற்றாலவெற்பில் ... *
ஓராயிரமுகமாய்யாங்கியகங்காநதிபோல் ... *
பாராய்பலருட்கரும்பட்சிநிறைசாயுதையே ... *

தரு-இராகம்-கல்யாணி- ஆதிதாளம்-பல்லவி.

சாயினுமையே-பறவைகள்-சாயினுமையே

அநுபல்லவி.

சாயினுமையேபாயும்பறவிகள் ... ... *
சந்தனக்காட்டுக்குஞ்சண்பகக்காவுக்கும் ...*
கோயிற்குழல்வாய்மொழிமங்கைப்பெருக்குங் ... *
குற்றாலநாயகர்சிற்றாற்றுவெள்ளம்போல் (சாயினு)

சரணங்கள்.

க- காராருஞ்செங்குலமேலப்பாட்டுப்பற்றுக் ... *
காடுவெட்டிப்பற்றுநீர்ச்சண்டைப்பற்று ... *
சீராரும்பேட்டைக்குளப்போடைக்காங்கயன் .. *
ஸ்ரீகிருஷ்ணன்மேடுமுனிக்குருகன்பேரி ... *
எரிவாய்சிவலப்பேரிவடகா ... *
விராசகுலராமன்கண்டுகொண்டான்வேலை .. *
மாரிப்பற்றுங்கீழமாரிப்பற்றுஞ்சன ... *
னேரிப்பற்றுஞ்சாத்தனேரிப்பற்றுஞ்சுற்றி (சாயினு)

உ- பாறைக்குளத்தெற்குமேல்வழுதிக்குளம் ... . *
பாட்டப்பெருங்குடஞ்செங்குறிஞ்சிக்குளம் ... *
ஊருணிப்பற்றுந்திருப்பணிநீள ... ... *
முயர்ந்தபுளியங்குளந்துவரைங்குளம் ... *
மாறனேரிக்குளமளத்தளம்பாறை ... ... *
வழிமறித்தான்குளமாலடிபற்றும் ... ... *
ஆரணிக்குற்றாலர்தோட்டச்செய்நெடுஞ்செ .. *
யபிஷேகப்பேரிக்கணக்கன்பற்றிலுஞ் ... (சாயினு)

௩-ஐயர்குற்றாலத்துநம்பியார்திருத்து,... ... ... *
மப்பாலொருதாலக்குற்றாலப்பேரி ... ... *
செய்யும்புலியூரிலஞ்சிமேலாகரஞ்... ... ... *
செங்கோட்டைசிவலநல்லூர்சிற்றம்பலம்... ... *
துய்யகுன்றக்குடிவாழவல்லான்குடி ... .. *
சுரண்டையூர்முதலுட்கிடைசுற்றியே... ... ...*
கொய்யுமலர்தாரிலஞ்சிக்குமரர்... ... ... *
குருவிளையாடுந்திருவிளையாட்டத்தில் ... (சாயினு)

சிங்கன்சொல்

கொச்சகக்கலிப்பா.

கொட்டமுருகூத்துடையார்குற்றாலநாதர்வெற்பில்... ... *
நெட்டழகுவாள்விழியும்நெத்தியின்மேற்கஸ்தூரிப்... *
பொட்டழகுங்காத்தழகுப்பொன்னழகுமாய்நடந்த ... *
கட்டழகிதன்னழகென்கண்ணளவுங்கொள்ளாதே ... ... *

தரு இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

மேயினுமையே-பறவைகள்-மேயினுமையே ... *

அநுபல்லவி.

மேயினுமையேகுற்றாலநாதர்வியன்குலசேகரப்பட்டிக்குளங்களும்ஆயி
ரப்பேரியுந்தென்காசியுஞ்சுற்றியயினையுந்தேளியுமாராலுங்கொத்தியே(

சரணங்கள்.

௧-ஆலயஞ்சூழத்திருப்பணியுங்கட்டியன்னசத்திரங்கட்டியப்பாலுந்தென்
காசிப்-பாலமுதங்கட்டிப்படித்தரஞ்சேர்கட்டிப்பத்தசனங்களைக்காக்
கத்துசங்கட்டி-மாலயன்போற்றிய குற்றாலநாதர்க்கு வழித்தொண்டு
செய்திடக்கச்சைகட்டிக்கொண்ட-சிலன்கிளுவையில்சின்னஞ்சேந்திர
ன்சிறுகாலசந்திதிருத்துப்புரவெல்லாம்... ... (மேயினு)
௨-தானைத்தலைவன்வயித்தியப்பன்பெற்றசைவக்கொழுந்துதருமத்துக்கா
லயஞ்-சேனைச்சவரிப்பெருமாள்சகோதரன்செல்வன்மருதூர்வயித்தி
யப்பனுடன்-மானவன்குற்றாலநாதனைபெற்றவன்வள்ளலெனும்பிச்ச
ப்பிள்ளைத்திருத்தெல்லாங்-கானக்குளத்துள்வாய்கீழைப்புதுக்குளங்க
ற்பூரக்காற்பற்றுந்தாட்டான்குளஞ்சுற்றும் ... ... (மேயினு)
௩-மன்னன்கிளுவையிற்சின்னணஞ்சேந்திரன் வடகரைவீட்டுக்கு மந்திரி
யர்கவும் - செந்நெல்மருதூர்க்கு நாயகமாகவுந்தென்காசி யூருக்குத்

தாயகமாகவுந்-தன்னை வளர்க்கின்றகுற்றாலநாதர் தலத்தைவளர்க் கின்றதானிகளாகவும் - நன்னகர்குற்றாலத்தந்தாதி சொன்னவன் றன்னூர் தொழும்பிச்சப் பிள்ளைத்திருத்தெல்லாம் ... ...(மெயினா)

௪-நன்னகரூர்கட்டிச்சாலைமடங்கட்டிநாயகர்கோவிற்கொளு மண்டபங்கட்டி-தென்னமாம்பரமானந்தத்தோப்பிட்டுத்தெப்பற்குளங்கட்டித்தேர்மண்டபங்கட்டிப்-பன்னுந்திரிகூடத்தம்பலங்கட்டிப்பசுப்பிரைகோடித்திருப்பணியுங்கட்டி-யந்நாளில்தர்மக்களஞ்சியங்கட்டுமனந்தபத்பநாபன்கட்டளைப்பற்றெலாம் ... ... (மெயினா)

௫-தந்தைமுன்கட்டின வம்பலத்துக்குந் தன்மத்துக்கும் நிலைக் கண்ணாடி போலவே,எந்தையார்தாசலிற்பிள்ளையார்செய்வித் திரண்டுகுறிஞ்சிப் படித்துறையுஞ்செய்த-கொந்தார்புயத்தானிராக்கதப்பெருமாள்குற்றாலநாதன்முன்னூற்றசகோதரன்-வந்தனைசேர்சங்குமுத்து தன்மைத்துனன்மன்னன்வயித்தியநாதன்திருத்தெல்லாம் ... ...(மெயினா)

௬-ஆர்மேல்வருகின்றதுன்பமுநீக்கியடங்கார்குறும்புமடக்கியேதென்காசி யூர்மேலுயர்ந்தமனுநீதிநாட்டி யுடையவர்குற்றாலர்பூசைநைவேத்தியம்தேர்மேற்றிருநாளுந்தெப்பற்றிருநாளும் சித்திரமண்டபஞ்சத்திரசாலையும்,பார்மேல்வளஞ்செயனந்தபத்மநாபன் பாலன்வயித்தியநாதன்திருத்தெல்லாம் ... ... (மெயினா)

௭-ஆறையழகப்பூபாலன் கட்டளையன்பன் திருமலைக்கொழுந்துதன்கட்டளை,நாறம்புகுற்றாலச்சங்குதன்கட்டளை நங்கலொல்லாசரி நரபாலன் கட்டளை,வீறுசேர்பால்வண்ணச்சங்குதன்கட்டளைமிக்கானவோமனூர் கிருஷ்ணன்வணிகேசன்-பேருடையன்பன்வருசங்குமுத்து தன்பேரானகட்டளைச்சீரானபற்றெல்லாம் ... ... (மெயினா)

௮-தானிகன்சர்க்கரைப்பண்டாரமென்னுந்தணியாதகாதற்பணிவிடைசெய்கின்றமேன்மைபெறுஞ்சுந்தரத்தோழன் கட்டளைமிக்ககருணைவப்பதிராமநாயகன்,நானிலமும்புகழ்தாகந்தீர்த்தானுடநல்லூர்வருசங்கரமூர்த்திகட்டளை ஆனசடைத்தம்பிரான்பிச்சைகட்டளையப்பால்மலைநாட்டார்கட்டளைப்பற்றெல்லாம் ... ... (மெயினா)

சிங்கன்சொல்-கொச்சகக்கலிப்பா.

செட்டிக்கிரங்கிவினைதீர்த்தவர்குற்றாலர்வெற்பில்... *
சுட்டிக்கிணங்குநுதற்சுந்தரியாள்கொங்கையின்மேல் ... *
மூட்டிக்கிடந்துகொஞ்சிமுத்தாடிக்கூடிநன்றாய்க் ... *
கட்டிக்கிடக்குமலைக்கச்சாய்க்கிடந்திலனே ... *

தரு-இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கண்ணிகொண்டுவா - குளுவா - கண்ணிகொண்டுவாடா

அநுபல்லவி.

கண்ணிகொண்டுவாடாபண்ணவர்குற்றாலர் ... *
காரார்திரிகூடச்சாரலிலேவந்து ... ... *
பண்ணியபுண்ணியமேறினாற்போலே .. *
பறவைகளெல்லாம்பறந்தேறிமேயுது (கண்ணி)

சரணங்கள்,

க- வானவர்சூழுமதுரையிற்பாண்டியன் ... *
மந்திரியார்கையில்முந்திப்பணம்போட்டு ... *
தானைசப்பட்டுமுன்கொண்டகொக்கெல்லாந் *
தரிகொண்டதில்லைநரிகொண்டுபோச்சுது ... *
கானவர்வேடத்தையினமென்றெண்ணாதே ... *
காக்கைபடுத்தகருமுகில்வண்ணனும் ... ... *
மேனாட்படுத்திட்டகொக்கிறகின்னும் ... *
விடைமேலிருப்பார்சடைமேலிருக்குது (கண்ணி)
உ- முன்னாள்படுத்தபருப்பெருச்சாளியை ... *
மூத்தநயினார்மொய்வாய்க்கொடுபோனார் ... *
பின்னைதம்பியாராமயிலையும் ... ... *
பிள்ளைக்குறும்பாற்பிடித்துகொண்டேகினார் ... *
பன்னாருமன்னத்தைநன்னகரீசர் ... ... *
பரிகலமீந்திடும்பார்ப்பானுக்கீந்தனர் ... *
வன்னபருந்தொருகள்வன்கொடுபோனான் ... ... *
வக்காவுநாரையுங்கொக்குப்படுக்கவே ... (கண்ணி)
ங- மீறுமிலஞ்சிக்குறத்தியைக்கொண்டசெவ் ... *
வேட்குறவன்முதல்வேட்டைக்குப்போனநாள் ... *
ஆறுநாட்கூடியொருகொக்குபட்ட ... *
தகப்பட்டகொக்கையவித்தொருசட்டியில் ... *
சாறுகவைத்தபின்வேதப்பிராமணர் ... ... *
தாமுங்கொண்டார்சைவர்தாமுங்கொண்டார்தவப் *
பெருமுனிவருமேற்றுக்கொண்டாரினிப் ... *
பிக்குச்சொல்லாமலேகொக்குப்படுக்கவே (கண்ணி)

கவிக்கூற்று-கொச்சகக்கலிப்பா.

ஆனைகுத்திச்சாய்த்ததிறலாளர்திருக்குற்றாலர் ... *
கூனிகொத்திமூக்கிலிக்கிக்கொக்கிருக்கும்பண்ணையெல்லாம் *
சேனைபெற்றவாட்காரச்சிங்கனுக்குக்கண்ணிகொண்டு ... *
பூனைகுத்திநூவன்முழுப்பூனையைப்போல்வந்தானே *

நூவன்-சொல்லுதல்

இராகம்-காம்போதி- சாப்புதாளம்,

கண்ணிகள்.

கலந்தகண்ணியைநெருங்கிக்குத்தினால்காக்காயும்படுமே-குளுவா *
காக்காயும்படுமே ... ... *
மலர்ந்தகண்ணியைக்கவிழ்த்துக்குத்தினால்வக்காவும்படுமே-குளுவா ...*
வக்காவும்படுமே ... ... *
உலர்ந்தகண்ணியையிறுக்கிக்குத்தினாலுள்ளானும்படுமே-குளுவா ... *
உள்ளானும்படுமே ... ... *
குலந்தகண்ணியைத்திருத்திக்குத்தடாகுற்றாலமலைமேல்-குளுவா... *
குற்றாலமலைமேல் ... ... *

சிங்கன்சொல் - கொச்சகக்கலிப்பா.

கள்ளுலவுகொன்றையந்தார்க்கர்த்தர்திரிகூடவெற்பில் *
பிள்ளைமதிவாணுதலார்பேசாதவீறடங்கத் ... *
துள்ளிமடிமேலிருந்துதோளின்மேலேறியவள் *
கிள்ளிமொழிகேட்கவொருகிள்ளையானேனிலையே ... *

தரு-இராகம்-கல்யாணி- ஆதிதாளம்.

பல்லவி.

கெம்பாறடையே-பொறுபொறு-கெம்பாறடையே ...*

அநுபல்லவி.

கெம்பாறடையேநம்பர்குற்றாலர் ... ... *
கிருபைப்புரவில்பறவைபடுக்கவே ... . *
வம்பாகவந்தவுன்சத்தத்தைக்கேட்டல்லோ ... *
வந்தகுருவிகலைந்தோடிப்போகுது ... (கெம்பா)

சரணங்கள்.

௧- ஏறுதமீன்களுமேறிவருகுது ... *
எத்திசைப்பட்டகுருகும்வருகுது ... *
நூறுகண்ணியைப்பெருக்கக்குத்தியே ... *
நூவனுநானுமிருந்தேமுனக்கினி ... ... *

பேருனகுனமருந்தாகிலும்பிறர் ... ... *
பேசாமல்வாடைப்பொடியாகிலுமலாக. . ... *
கூறுகிலுமொருபங்காகிலுமொரு ... ... *
கொக்காகிலும்நரிக்கொம்பாகிலுந்தாறேன்... (கெம்பா)
உ-பூசியுமெத்துமுடித்துவளைவிட்டும் .. .. *
பொட்டிட்டுமையிட்டுப்பொன்னிட்டுப்பூவிட்டுக் ... *
காசுபறித்திடும்வேசையராசாரக்... ... ...*
கண்ணிக்குள்ளேபடுங்காமுகர்போலவும் ... ... *
ஆசாரவீனத்துலுக்கன்குதிரை ... ...*
யடியொட்டிப்பாறையொட்டிறுற்போலுந்... ... *
தேசத்துக்கொக்கெல்லாங்கண்ணிக்குள்ளேவந்து... ... *
சிக்குதுபார்கறிதக்குதுபாரினிக்... .. ... (கெம்பா)
௩-ஆலாவுங்கொக்குமருமேவருகுது .. .. *
ஆசாரக்கள்ளர்போல்நாரைதிரிகுது ... ... *
வேலானகண்ணியராசையிறைக்கிறு ... ... *
மேலுந்திரிந்திடும்வேடிக்கைக்காரர்போல் ... *
காலாலதிர்த்துத்திரிந்துதிரிந்தெங்கள் ... ... *
கண்ணிக்குள்ளாகும்பரவையைப்போக்கிட்டு... ...*
பாலாறுநெய்யாறுபாய்கின்றவூட்டத்திற் ... ... *
பல்லொடிக்கச்சிறுகல்லகப்பட்டாற்போல் ... (கெம்பா)

கவிக்கூற்று.

(ஆசிரியவிருத்தம்.)

தேவிகுழல்வாய்மொழிப்பேர்நாச்சியார்கால் செண்பகக்கால்திருந் தமதிகுடினூர்கால்-காவியல்வெண்ணமடைதட்டான்பற்றுக் கள்ளிக்குள் மழகர்பள்ளன்கூற்று-வாவிதொறுநின்றுசிங்கன்வேட்டையாடிவடவருள் யாற்றுக்கால்வடகால்தென்கால்- கோவில்விளையாட்டமெங்குங்கண்ணிகு த்திக்கூவினுனவனைவிட்டேவிருனே ... ... *

சிங்கன்-சொல்லுதல்

இ-ம்-தர்பாரி-சாபுதாளம்

கண்ணிகள்.

க- கல்வித்தமிழ்க்குரியார்திரிகூடநாதர்கீர்த்தர்பொற்றுள்பரவுஞ் ... *
செல்வக்கடலனையான்குற்றாலச்சிவராமநம்பியெங்கோன்... ... ... *
வல்லமணியபட்டன்பேருமைவளர்சங்குமுத்துநம்பி ... ...*
வெல்லுந்தற்றாலநம்பிபுரவெல்லாம்மீன்கோத்திக்கூட்டமையே *

௨- சீராளன்பிச்சபிள்ளைதிருப்பணிசெல்வப்புதுக்குளமும் ... *
காராளன்சங்குமுத்துதிருத்தொடைக்காங்கேயன்கட்டளையும் .....*
வெகுமாராஜன்தென்குடிகைவைத்தியநாதன்புதுக்குளமுந் .... *
தாராளமானபள்ளும்வெள்ளனமுந்தாராவுமேவுதையே... .....*
௩- தானக்கணக்குடனே ஸ்ரீபண்டாரந்தன்மடபத்தர்கணக்கும்........ *
வானவர்குற்றாலர்திருவாசம்பாடநற்பத்தியமும் ... .. *
நானிலஞ்சூழ்குடிகைவைத்தியநாதனற்பாலன்... ... *
தானபிமானம்வைத்தசிவராமன்சம்பிரதிகணக்கும் ... ...*
௪-வேதநாராயணவேள்குமாரன்விசைத்தொண்டநாடாளன் ... *
சீதரன்முத்துமடன்னல்விசாரிப்பச்சேர்ந்தபுரவிமனெல்லாம் ... *
காதலாய்க்கண்ணிவைத்துப்பறவைக்குக்கங்கணங்கட்டிநின்றே ... *
னேதோவொருபறவைதொடர்ந்துவந்தென்னைக்கடிக்குதையே ...*

சிங்கன்-சிங்கியை-நினைத்துக்கொள்ளுதல்

விருத்தம்,

காவலர்திரிகூடத்திற்காதலாற்கலங்கிவந்த ... ... *
நாவனைப்பழித்துச்சிங்கனேக்கியேவேட்டைகாட்டி ... *
லாவல்சேர்காமவேட்டையாசையாலன்னப்பேட்டைச் ... *
சேவல்போய்ப்புணரக்கண்டான்சிங்கிமேற்பிரமைகொண்டான் *

சிங்கியைநினைத்துப்புலம்பல்

இ-ம்-ஆகிரி-சாப்புதாளம்

கண்ணிகள்.

௧- எட்டிக்குரலிலொருகுரல்கூவும் ... புறாவே - யென
தேகாந்தசிங்கியைக்கூவாததென்ன ... குலாவே
௨- மட்டார்குழலிதன்சாயலைக்காட்டு ... மயூரமே - யவள்
மார்பிலெழுந்தமுலையையுங்காட்டுப ... சாரமே
௩- தட்டொத்தரும்பத்தடமுலைகட்டுஞ் ... சகோரமே - சற்றுந்
தண்ணென்றும்வெச்சென்றுங்காட்டிவிட்டாலுப-காரமே
௪- கட்டிதிரவியக்கண்போலுநன்னகர்க் ... காவியே-கண்ணிற்
கண்டிடமெல்லாமவளாகப்போற்றுது ... பாவியே

சிங்கன்சொல்-கொச்சகக்கலிப்பா.

செட்டிபத்திற்கண்ணிவைத்தேன்சிங்கிநடைச்சாயலினாற் *
பெட்டைக்குளத்திலன்னப்பேடைநடைபார்த்திருந்தேன் *
கட்டுற்றநன்னகர்க்கென்கண்ணியெல்லாங்கொற்றிவெற்றி *
கொட்டிக்கொண்டையேகுருவியெல்லாம்போயினுமே *

தரு-இராகம்-முகாரி- சாப்புதாளம்.

பல்லவி.

போயினாமையே-பறவைகள்- போயினாமையே.

அநுபல்லவி.

போயினாமையேநாயகர்குற்றாலர் ... *
பொல்லாததக்கன்மகத்தையழித்தநாள் ... *
வாயிலடிபட்டிடிபட்டுதைபட்டு ... *
வானவர்தானவர்போனதுபோலவே (போயினா)

சரணங்கள்.

க- மேடையினின்றொருபஞ்சவர்ணக்கிளி ... *
மின்னார்கைதப்பியயன்முன்னாகவந்தது ... *
பேடையென்றேயதைச்சேவல்தொடர்ந்தது ... *
பின்னொருசேவலுங்கூடத்தொடர்ந்தது ... *
கூடியவின்பமிரண்டுக்குமெட்டாமற் ... ... *
சுந்தோபசுந்தரர்வந்தகலாபத்திற் ... *
காடெல்லாம்பட்சியாய்கூடியுளம்பாடிக் *
கண்ணியுந்தட்டியென்கண்ணிலுங்குட்டியே (போயினா)

உ- ஆயிரங்கொக்குக்கண்ணியைவைத்துநா ... *
னப்பாலேபோயொருமிப்பாயிருக்கையில் ... *
ஆயிரங்காகங்களாயிரம்பட்டு ... ... *
மனாத்துவினாத்துக்கிடப்பதுபோலவே ... *
காயமொடுங்கிக்கிடந்ததுகண்டுநான் ... *
கண்ணிகழற்றிநிலத்திலேவைத்தபின் ... *
சேயிலமுதன்போருட்டாலேபஞ்சாட்சரஞ் ... *
சேவித்தமன்னவன்பாவம்போனாப்போலே (போயினா)

௩- தம்பமென்றேநம்பினோச்சதிபண்ணித் ... *
தான்வாழப்பார்ப்பவர்செல்வங்கள்போலவும் ... *
பம்பும்வடடாலருவியிற்றோய்ந்தவர் ... ...*
பாவங்கழுநீராய்ப்போவதுபோலவும் ... *
கும்பமுனிக்குச்சிவமானகாலங் ... *
குறித்தோடிப்போனவைணவர்போலவும் ... *
அம்பிகைபாகந்திரிகூடநாத ... *
ரடியவர்மேல்வந்ததுன்பம்போனாற்போலே (போயினா)

நூவன்- சிங்கனைப்பழித்தல்

விருத்தம்

வருக்கையார்திரிகூடத்தின்மாமிமேற்கையும்வேலிப் ... *
பருத்திமேற்கண்ணுமானபாவைபோல் வேட்டைபோனாய்க்
கருத்துவேறுனாய்த்தாயைக்கற்பித்தமகள்போலென்னைச் ... *
சிரித்தனை சிங்காவுன்னைச்சிரித்ததுக்காமப்பேயே ... *

இதுவும்-நூவன்சொல்லுதல்

விருத்தம்.

கடுக்கையார்திரிகூடத்திற்காமத்தால்வாமக்கள்ளைக் ... *
குடித்தவர்போலேவிழுந்தாய்கொக்குநீபடுத்துவாழ்ந்தாய் *
அடிக்கொருநினைவேன்சிங்காவாசப்பேயுனைவிடாது *
செடிக்கொருவலையும்போட்டுச்சிங்கியைத்தேடுவாயே ... *

சிங்கன்- நூவனுக்குச்சொல்லுதல்

விருத்தம்

வேடுவக்கள்ளியோர்தாண்மெய்யிலாதவனேயென்னை ... *
ஆடலிற்சொன்னபேச்சானுருவிலிபகைத்தானென்மேற் *
போடுவான்புட்பயாணம்புறப்படமாட்டேனூவா *
சேடநீதிரிகூடத்திற்சிங்கியைத்தேடுவாயே ... *

நூவல்சொல் - விருத்தம்

அங்கணர்திரிகூடத்திலவளைநீயணைந்தாலென்ன ... *
நுங்களிற்பிரிந்தாலென்னநூவனுக்குண்டோநட்டங் *
கங்கணமெனக்கேன்சிங்காகாசிலையுனக்குண்டானாற் ... *
கொங்கணச்சிங்கிதன்னைக்கூட்டிவாகாட்டுவேனே... *

தலங்கள்தேடிப்போன

விருத்தம்

திருவணுமலைகாஞ்சிதிருக்காளத்தி சீர்காழிசிதம்பரந்தென்னூரூர்காசி குருநாடுகேதாகங்கோலகொண்டை கோகரணஞ்செகநாதங் கும்பகோணம்;அரியலூர்சீரங்கந்திருவானைக்காவடங்கலும்போய்ச் சிங்கிதனைத்தேடிச்சிங்கன்- வருசிராப்பள்ளிவிட்டுமதுரைதேடி மதிகொண்டான்றிரிகூடமெதிர்கண்டானே ... ... *

வில்லிபுத்தூர்கருவைநல்லூர்புன்னைக்காவுமேவள்திருச்செந்தூர்குருகூர்ஸ்ரீவைகுந்த-நெல்வேலிசிங்குளநீதேவநல்லூர் நிலைதருசிற்றூர்குமரி

திருவாங்கோடு - சொல்லரியகுருங்கைகளக்காடுதேடித் தொன்மருதூர
த்தாளநல்லூர்தேடிச் - செலவுருறைசிவசைலம்பாவநாசந் திரிகூடச்சிங்
கிதனைத்தேடுவானே... ... ...*

சிங்கன்சொல்லுதல்.

இராகம்-நீலாம்புரி-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. பேடைக்குயிலுக்கண்ணியைவைத்துநான்மாடப்புறாவுக்குப்போனே
மாடப்புறாவுங்குயிலும்படுத்தேன்வேடிக்கைச்சிங்கியைக்காணேன் [ன்
௨- கோலமயிலுக்குக்கண்ணியைவைத்துநானாலாப்படுக்கவேபோனேன்
ஆலாவுங்கோலமயிலும்படுத்தேன்மாலான்சிங்கியைக்காணேன் ...*
௩- வவ்வாற்பறவையின்வேட்டைக்குப்போய்க்காமவெவ்வேட்டை தப்பி
விட்டேன்- வவ்வால்படுக்கமரநாயகப்பட்டவைபோகமாச்சுதானே
௪. இவ்வாறுவந்தவெந்நெஞ்சில்விகாரத்தையெவ்வாறுதீர்த்துக்கொள்வே
னே-செவ்வாய்கரும்பையநுகராகவஞ்சியைசிங்கியைக்காணுகிலேனே

குற்றாலத்தில்-சிங்கன்-சிங்கியைத்தேடுதல்.

விருத்தம்.

நற்றாலந்தன்னிலுள்ளோர்யாவரோனுநன்னகரத்தலத்தில்வந்துபெ
றுவார்பேறு - பெற்றார்தாநன்னகரத்தலத்தைவிட்டாற் பிரமலோகம்வ
ணக்கும்பேறுண்டாமோ - வற்றாதவடவருவிச்சாரனீங்கி வடகாசிகுமரி
மட்டுமலைந்தசிங்கன் - குற்றாலத்தலத்தின்முன்னேதவத்தால்வந்து கூடி
னான்சிங்கிதனைத்தேடினானே... ... ... *

சிங்கியைக்காணாமற் புலம்பல்,

தரு-இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சிங்கியைக்காணேனே-யென்வங்கணச்-சிங்கியைக்காணேனே ...*

அநுபல்லவி

சிங்கியைக்காமப்பசுங்கிளிப்பேடையைச்... ... *
சீர்வளர்குற்றாலர்பேர்வளப்பாடிய ... ...*

சங்கிதவாரியையிங்கிதநாரியை... ... ... *
சல்லாபக்காரியையுல்லாசமோகன ... ...(சிங்கி)

சரணங்கள்

௧- ஆரத்தனத்தைப்படங்கொண்டுமூடி யசைத்துநின்றாயதையானைக்கொம்பென்றே-கோரத்தைவைத்தவிழிக்கெதிர்சென்றேன்கொஞ்சத்தனத்தையறிந்துசுகக்காரி-பாரத்தனத்தைத்திறந்துவிட்டாள்கண்டு பாவியனாவிமறந்துவிட்டேனுடன்-தீரக்கனியமயக்கிமயக்கியேசிங்காரமோகனச்சிங்கிகொண்டாளந்த... ... ... (சிங்கி)

௨- பூவென்றபாதம்வருடிவருடி புளகமுலையை நெருடிநெருடி-யேவன்ற கண்ணுக்கோரஞ்சனந்தீட்டி யெடுத்துச்சுருளையிதழாலிடுக்குவள்-வாவென்றுகைச்சுருள்தானென்றுநானு மகக்குறிகண்டுநகக்குறிவைத்தபின்-ஆவென்றொருக்காலுரைப்பளதுக்குக் கிடந்துகொதிக்குதென்பேய்மனம்... ... ... (சிங்கி)

௩- தாராடுங்குன்றிடத்தையொதுக்கித் தடமார்பிறுகத்தழுவவந்தாலவள் வாராடுங்கொங்கைக்குச்சந்தனம்பூசாள் மருத்துநான்பூசினாப்பூசலாகாதென்பள் - சீராடிகூடிவிளையாடியிப்படித் தீராமயல்தந்ததிராண்மைக்காரியைக்- காராடுங்கண்டர்தென் னாட்டுறைகாரிகைப்பூவையையாரியப்பாவையைச் ... ... (சிங்கி)

நூவன்வினவுதல்

கொச்சகக்கலிப்பா.

சங்கமெங்கமெல்லாமுத்தீனுசங்கதிர்திரிகூடவெற்பிற்... ... *
பொங்கமெல்லாஞ்செய்யுமுங்கள் பொங்கமெல்லாம்யாரறிவார் ...*
சிங்கமெல்லாமொத்ததுடிசிங்காவுன் சிங்கிதனக் .. ... *
அங்கமெலாஞ்சொல்லியடையாளஞ்சொல்வாயே ... ...*

தரு-இராகம்-பியாகடை-மிசுரதாளம்.

பல்லவி.

கறுப்பிலழகியடா-காமச்... ... ... *

அநுபல்லவி.

சுறுக்கிலழகிச்சிங்கிசுகக்காரி... ... (கறுப்பி)

சரணங்கள்

௧- கண்களிரண்டுமம்புக்கணைபோலநீண்டிருக்கும்... ...*
கையத்தனையகலங்காணுமடா... .. ... *
பெண்கள்மயங்குமவள்விரகப்பார்வை ... ...*
சிங்கிபிடித்தால்மதப்பயலும்பெலப்பாளே... (கறுப்பி)

௨ நகையுமுகமுமவள்நாணையக்கைவீச்சும் ... *
பகைவரும்பிரிந்துபார்ப்பாரடா ... *
தொகையாச்சொன்னேனினிச்சொல்லக்கூடாதொரு *
வகையாவருகுதென்னையக்குதையேஐயே (கறுப்)
௩- விடையில்வரும்பவனியுடையார்திருக்குற்றாலர் ... *
சடையிலிளம்பிறைபோல்தனிநுதலாள் ... *
நடையிலழகுமிருதுடையிலழகுமவ ... ... *
ளுடையிலழகுமென்னையுருக்குதையேஐயே (கறுப்)

கொச்சகக்கலிப்பா

சாட்டிநிற்குமண்டலமெல்லாஞ்சாட்டியில்லாப்பம்பரம்போ
லாட்டுவிக்குங்குற்றாலத்தண்ணலார்நன்னாட்டில் ... *
காட்டுவிக்குமுன்மோகக்கண்மாயச்சிங்கிதனைக் *
கூட்டிவைக்கும்பேர்களுக்குக்கூலியென்னசொல்வாயே

இராகம்-தர்பார்-ரூபகதாளம்

கண்ணிகள்

௧- வாடைமருந்துப்பொடியும் .. ... அம்பியூர
மரப்பாவைபின்றொடரமாயப்பொடியும் ... *
௨- கூடியிருக்கமருந்தும் ... ... இருபொழுதுங்
கூடியிருப்பார்களைக்கலைக்கமருந்தும் ... *
௩- காடுகட்டக்கினிக்கட்டும் ... ... குறளிவித்தை
கண்கட்டுவித்தைகளுங்காட்டித்தருவேன் ... *
௪- வேடிக்கைக்காமரதிபோல் ... ... திரிகூட
வெற்பினுறுசிங்கிதனைக்காட்டாயையே ... *
௫- மலையைக்கரையப்பண்ணுவேன் ... குமரிகட்கு
வாராதமுலைகளும்வரப்பண்ணுவேன் ... *
௬- முலையையொளிக்கப்பண்ணுவேன் ஒளித்தபேரை
மோகினிமந்த்ரஞ்சொல்லிவரப்பண்ணுவேன் ... *
௭- திலதசிரகஞ்செய்வேன் ... ஒருவருக்குந்
தெரியாமற்போகவரச்சித்துமறிவேன் ... *
௮- கலகமதனப்பயலை ... யென்மீதிற்கண்
காட்டிவிட்டசிங்கிதனைக்காட்டாயையே ... *

நூவன்சொல்லுதல்.

கொச்சகக்கலிப்பா.

ஆற்றைநான்கடத்திவிட்டாலாகாசமார்க்கமோடத *
தேற்றநீயறிவாயல்லோதிரிகூடமலையிற்சிங்கா ... *
சாற்றுமுன்மருந்துபோலச்சகலர்க்குங்குறிகள்சொல்லி
போற்றுமுன்சிங்கிபோனபுதுத்தெருவிதுகண்டாயே *

சிங்கன்-சிங்கியைக்காணுமல்-வருந்தல்

தரு-இராகம்-மூகாரி-ஆதிதாளம்.

பல்லவி

எங்கேதான்போனாளோ-என்சிங்கியிப்போ ... *
எங்கேதான்போனாளோ ... ... *

அநுபல்லவி

கங்காளர்திரிகூடர்கர்த்தர்திருநாடுதனில் ... (எங்கே)

சரணங்கள்

௧-வேளாகிலுமயக்குவள்-வலியதட்டிக் ... *
கேளாமலுமுயக்குவள் ... ... *
ஆளாயழகனுமாயானையெங்கேகண்டாளோ ... *
தோளாசைக்காரிசிங்கிசும்மாகிடக்கமாட்டாள் (எங்கே)

௨- மெய்க்குறியாலெங்கும்வெல்லுவள்-மனக்குறியுங் *
கைக்குறியுங்கண்டுசொல்லுவள் ... ...*
திக்கிலடங்காதுகுறியிக்குளடங்காதுமொழி ... *
மைக்குளடங்காதுவிழிகைக்குளடங்காதகள்ளி (சிங்கி)

௩- சித்திரச்சபேசர்மேலே-சிவசமயப் ... *
பத்தியில்லாப்பேயர்போலே ... *
குற்றியிலாக்குங்களுங்குடுவையிற்றென்னங்கள்ளும் *
அத்தனையுங்குடித்துப்போட்டார்பிறகேதொடர்ந்தாளோ

சிங்கியெதிர்ப்படுதல்

விருத்தம்

சேமமிகுபுனைந்த குற்றாலநாதர் திருநாட்டி லிருவருந்தாங் கண்டபோதே- காதலெனுங்கடல்பெருகித் தரிகொள்ளாமற் கைகலக்கும்போதுவலைகுறுக்கிட்டாற்போல்- வீதிவந்துகுறுக்கிடவேநாணம்பூண்ட விண்ணுனைச்சிங்கிதனைக்கண்டுசிங்கன், தூதுவந்தநளனென்னுலங்குதமயந்தியெனத்தோன்றினளே ... ...*

தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்.
பல்லவி.
இங்கேவாராய்-என்கண்ணே-இங்கேவாராய் ... *
அநுபல்லவி.
இங்கேவாராய்மலர்ச்செங்கைதாராய்-மோகச்-சங்கையாராய்
காமச்சிங்கியாரோ யிப்போ ... ... (இங்கே)
சரணங்கள்.
க-பாதம்நோமே-நொந்தால்-மனம்-பேதமாமே *
பாதம்நோகநிற்பதேதுபாவமினிகூதலோகொடிதுகாதலோகடினம் (இ

உ-பாவிதானே-மதன்கணை-ஏவினானே - * [ட-(இ)
காவில்மாங்குயில்கள்கூவிக்கூவியெனதாவிசோருதன்னை யாவியாவிகட்

ஈ-வருக்கைமூலர்-வடவருவித்-திருக்குற்றாலர் *
பெருக்கம்பாடிக்கொள்ளமருக்கள்சூடிக்கொள்ள ஒருக்காலூடிக் கொள்
ள இருக்காலூடிக்கொள்ள ... ... (இங்கே)
சிங்கன்-சிங்கியைக்கண்டுமகிழுதல்.
கொச்சகக்கலிப்பா.
தொண்டாடுஞ்சுந்தரர்க்குத்தோழர்திரிகூடவெற்பிற் ... *
றிண்டாடிநின்றசிங்கன்சீராடுஞ்சிங்கிதனைக் ... *
கண்டாடித்துள்ளாடிக்கள்ளாடுந் தும்பியைப்போற் ... *
கொண்டாடிக்கொண்டாடிக் கூத்தாடிக்கொண்டானே ... *

சிங்கனுக்கும்-சிங்கிக்கும்-சம்வாதம்.
இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்
கண்ணிகள்.
(சிங்கன்) இத்தனைநாளாக வென்னுடன்சொல்லாமல் *
எங்கேநடந்தாயடி-சிங்கி ... ... (எங்கே)

(சிங்கி) கொத்தார்குழலார்க்கு விஸ்தாரமாகக் ... *
குறிசொல்லிப்போனேனடாசிங்கா (குறிசொல்)

(சிங்கன்) பார்க்கிலதிசயந்தோணுதுசொல்லப் ... *
பயமாயிருக்குதடிசிங்கி ... ... (பயமா)

(சிங்கி) ஆர்க்குப்பயமினித் தோணினகாரியம் ... *
அஞ்சாமற்சொல்லடாசிங்கா ... (அஞ்சா)

(சிங்கன்) காலுக்குமேலே பெரியவிரியன் ... *
கடித்துக்கிடப்பானேன் சிங்கி ... (கடித்து)

(சிங்கி) சேலத்துநாட்டிற் குறிசொல்லப்பெற்ற ... *
சிலம்புகிடக்குதடா சிங்கா ... (சிலம்பு)

(சிங்கன்) சேலத்தாரிட்டசிலம்பிற்குமேலே ... *
திருகுமுறுக்கென்னடி சிங்கி ... (திருகுமு)

(சிங்கி) கோலத்துநாட்டார்முறுக்கிட்டதண்டை ... *
கொடுத்தவரிசையடா சிங்கா ... (கொடுத்)

(சிங்கன்) நீண்டுகுறுகியும்நாங்கூழ்ப்போல ... *
நெளிந்தநெளிவென்னடி சிங்கி ... (நெளிந்த)

(சிங்கி) பாண்டியனார்மகள்வேண்டுங்குறிக்காகப் ... *
பாடகமிட்டதடா சிங்கா ... (பாடக)

(சிங்கன்) மாண்டதவளையுன்காலிலேகட்டின ... *
மார்க்கமேதேதடி சிங்கி ... (மார்க்கம)

(சிங்கி) ஆண்டவர்குற்றாலர்சந்நிதிபெண்கள் ... *
அணிமணிக்கெச்சமடா சிங்கா (அணிமணி)

(சிங்கன்) சுண்டுவிரல்தோறுங்குண்டலப்பூச்சி *
சுருண்டுக்கிடப்பானேன் சிங்கி ... (சுருண்)

(சிங்கி) கண்டியதேசத்திற்பண்டுநான்பெற்றது *
காலாழிபீலியடா சிங்கா ... ... (காலாழி)

(சிங்கன்) மெல்லியபூந்தொடைவாழைக்குருத்தை *
விரித்துமடித்தவரார்சிங்கி ... ... (விரித்து)

(சிங்கி) நெல்வேலியார்தந்தசல்லாபச்சேலை ... .. *
நெறிபிடித்தேகொடுத்தார்சிங்கா ... (நெறிபி)

(சிங்கன்) ஊருக்குமேற்கேயுயர்ந்தவரசிலே ... ... *
சாரைப்பாம்பேதுபெண்ணேசிங்கி ... (சாரை)

(சிங்கி) சீர்பெற்றசோழன்குமாரத்தியார்தந்த ... ... *
செம்பொன்னரைஞாணடாசிங்கா (செம்பொ)

(சிங்கன்) மார்பிற்குமேலேபுடைத்தசிலந்தியில் ... *
கொப்புளங்கொள்வானேன்சிங்கி ... (கொப்பு)

(சிங்கி) பாருக்குள்ளேற்றமாய்க்காயங்குளத்தார்தந்த *
பாரமுத்தாரமடாசிங்கா ... ... (பாரமு)

(சிங்கன்) ஆகாவடமெல்லாமங்கனேகூடவே ... *
ஆவாரைபூத்ததடிசிங்கி ... ... (ஆவாரை)

(சிங்கி) ஏகாவடமென்றுசீர்காழியாரெனக் ... *
கிட்டவரிசையடாசிங்கா ... ... (கிட்டவரி)

(சிங்கன்) எட்டுப்பறவைகுமுறுங்கழுத்திலே ... *
பத்தெட்டுப்பாம்பேதடிசிங்கி ... ... (பத்தெட்)

(சிங்கி) குட்டத்துநாட்டாருங்காயங்குளத்தாரும் ... *
இட்டசவடியடாசிங்கா ... ... (இட்டச)

ஷை-வேறு.

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

கண்ணிகள்.

(சிங்கன்)வள்ளிக்கொடியிலேதுத்திப்பூப்பூப்பானேன்... ...(சிங்கி)
(சிங்கி)காதில்-வக்காளத்தாரிட்டசிங்காரக்கொப்படா ... (சிங்கா)

(சிங்கன்)கள்ளிப்பூப்பூப்பததிசயமல்லவோ... ... (சிங்கி)
(சிங்கி)தெற்கு-வள்ளியூரார்தந்தமாணிக்கத்தண்டோடடா ... (சிங்கா)

(சிங்கன்)வண்ணக்குமிழிலேபுன்னையரும்பேது ... (சிங்கி)
(சிங்கி)மண்ணில்-முன்னீர்ச்சலாபத்துமுத்துமூக்குத்திகாண்... (சிங்கா)

(சிங்கன்)சொரிகிமுடித்ததில்தூக்கணமேதடி... ... (சிங்கி)
(சிங்கி)தென்-குருகையூரார்தந்தகுப்பியுந்தொங்கலுஞ் ...(சிங்கா)

(சிங்கன்)விந்தையால்மேலெல்லாமின்வெட்டியார்ப்பானேன் (சிங்கி)
(சிங்கி)இந்த-வண்ணப்பணிகளின்மாணிக்கக்கல்லொளி... .. (சிங்கா)

(சிங்கன்)முலையென்றுசொல்வதைமூடிக்கிடப்பானேன் ... ...(சிங்கி)
(சிங்கி)செஞ்சி-விலைமாதர்தந்ததுவேடிக்கைக்கச்சடா... ... (சிங்கா)

(சிங்கன்)மூடிக்கிடப்பவும்நாற்றங்குலைப்பானேன் ... (சிங்கி)
(சிங்கி)இது-ஆடித்திருத்தங்கால்வாடைப்பொடியடா .. ... (சிங்கா)

(சிங்கன்)அந்தப்பொடியால்முலைவீக்கம்போகுமோ ... ...(சிங்கி)
(சிங்கி)வீக்கம்-ஆறாலுனக்கென்னபோனாலுனக்கென்ன ... (சிங்கா)

(சிங்கன்)இந்தப்பணியைநீபூணப்பொறுக்குமோ ... (சிங்கி)
(சிங்கி)புவி-ஈசர்க்குங்கற்றோர்க்கும்எல்லாம்பொறுக்குங்காண் (சிங்கா)

(சிங்கன்)குல்லித்தைப்பார்த்தால்கொடியிடைதாங்குமோ ... (சிங்கி)
(சிங்கி)தன்-கொடிக்குச்சுரைக்காய்கனத்துக்கிடக்குமோ (சிங்கா)

(சிங்கன்)இல்லாதசிற்றெல்லாம்எங்கேபடித்தாயடி ... (சிங்கி)
(சிங்கி)நாட்டில்-நல்லாரைக்கண்டாருக்கெல்லாம்வருமடா (சிங்கா)

(சிங்கன்)பெட்டகப்பாம்பைப்பிடித்தாட்டவேண்டாமோ (சிங்கி)
(சிங்கி)இந்த-வெட்டவெளியிலேகோடிப்பாம்பாடுமோ ...(சிங்கா)

(சிங்கன்)கட்டிக்கொண்டேசற்றேமுத்தங்கொடுக்கவோ (சிங்கி)
(சிங்கி)நடுப்-பட்டப்பகலில்நானெட்டுக்கொடுப்பேனோ... (சிங்கா)

(சிங்கன்)முட்டப்படாமுலையானையைமுட்டவோ ... ... (சிங்கி)
(சிங்கி)காமம்-மட்டுப்படாவிட்டால்மண்ணோடேமுட்டடா (சிங்கா)

(சிங்கன்)சேலையுடைதன்னைச்சற்றேநெகிழ்க்கவோ .. ... (சிங்கி)
(சிங்கி)சும்மா-நாலுபேர்முன்னென்னைநாணங்கெடுக்காதே... (சிங்கா)

(சிங்கன்)பாதம்வருடித்துலைகுத்தவேண்டாமோ ... (சிங்கி)
(சிங்கி)மனம்-போதவருடிப்போய்ப்பூனையைக்குத்தடா ... (சிங்கா)
(சிங்கன்)நாக்குத்துடிக்குதுநல்வாயிதழுக்கு ... ...(சிங்கி)
(சிங்கி)உன்றன்-வாய்க்குள்ளிருப்பதுமாலைக்கள்ளல்லவோ (சிங்கா)
(சிங்கன்)ஒக்கபடுக்கவொதுகிடம்பார்க்கவோ ... (சிங்கி)
(சிங்கி) பருங்-கொக்குப்படுக்கக்குறியயிடம்பாரடா ... (சிங்கா)
(சிங்கன்) வித்தைக்காறியுன்னைவெல்லாக்கூடாதடி ... (சிங்கி)
(சிங்கி) அது-சந்தேகமோவுன்தலைப்பேனைக்கேளடா ... (சிங்கா)
(சிங்கன்) தென்னாடெல்லாமுன்னைத்தேடித்திரிந்தேனே (சிங்கி)
(சிங்கி)அப்பா-விந்நாட்டில்வந்தென்னையெப்படிநீகண்டாய் (சிங்கா)
(சிங்கன்) நன்னகர்குற்றாலநாதரைவேண்டினேன் ... (சிங்கி)
(சிங்கி) மணிப்-பன்னகம்பூண்டாரைப்பாடிக்கொண்டாடுவோம்(சிங்கா)
(சிங்கன்) பாடிக்கொள்வாரொவராடிக்கொள்வாரொவர் ... (சிங்கி)
(சிங்கி)நீதான்-பாடிக்கொண்டாற்போதுமாடிக்கொள்வேனடா (சிங்கா)

நேரிசைவெண்பா.

சுற்றுதலூர்தோறுஞ்சுற்றவேண்டாம்புலவீர்... *
குற்றாலமென்றொருக்காற்கூறினால்-வற்றா ... *
வடவருவியானைமறுபிறவிச்சேற்றி ....*
வடவருவியானைநமை ... ... *

வாழ்த்து-கண்ணிகள்.

க-கொற்றமதிச்சடையானைக்குறும்பலாவுடையானை ... *
வெற்றிமழுப்படையானைவிடையானைவாழ்த்துகிறேன் *

உ- தாதையில்லாத்திருமனைத்தடமலைக்கருமகனை ... *
வேதசங்கவிதியானைவேதியனை வாழ்த்துகிறேன் ... *

௩-தந்திமுகத்தொருகோனைத்தமிழ்சஞ்சிமுருகோனை ... *
மைந்தனொனுமிறையோனைமறையோனைவாழ்த்துகிறேன் *

௪-தீமகத்திற்பறிகொடுத்ததிருமுடிக்காபொருமுடியை ... *
மாமனுக்குவரிசையிட்டமருமகனைவாழ்த்துகிறேன் ...*

௫- காமனுக்கும்பூமனுக்குங்கன்னிதெய்வயானைக்கும் ... *
மாமனெனவேபகரும்வள்ளறன்னைவாழ்த்துகிறேன் ... *

௬- நீடுலகெலாமளந்தநெடியமாலுமயனும்... ... *
தேடனையதிரிகூடச்செல்வனையான்வாழ்த்துகிறேன் ... *

௭- சித்ரநதியிடத்தானைத்தேனருவித்தடத்தானைச் ... ... *
சித்ரசபைநடத்தானைத்திடத்தானைவாழ்த்துகிறேன் ... *

௮- காலவயிரவனைக்காவில்வளர்த்தேவனை ... ... *
மேலவாசலப்பனைமேன்மேலும்வாழ்த்துகிறேன் ... ... *

௯- கருதுலகமெங்கும்புகழ்கன்னிமார்பெண்களையும் ... ... *
வரிசைதுரைத்தளவாய்மாடனையும்வாழ்த்துகிறேன் ... *

௰-பனகமணிபூண்டவனைப்பக்தர்களையாண்டவனை ... ... *
அனவரதத்தாண்டவனையாண்டவனைவாழ்த்துகிறேன் ... *

இதுவுமது-விருத்தம்.

வார்வாழுந்தனத்திகுழல்வாய்மொழியம்பிகைவாழிவதுவைபூட்டுந் *
தார்வாழிதிரிகூடத்தார்வாழிகுறுமுனிவன்றலைநாட்சொன்ன *
பேர்வாழியரசர்கள்செங்கோல்வாழிநன்னகரப்பேராலோங்கும் *
ஊர்வாழிகுற்றாலத்தலத்தடியார்வாழிநீடூழிதானே... ... ...*

திருக்குற்றாலக்குறவஞ்சி

முற்றிற்று.